# போக்குவரத்துத் துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு

# 2018– 2019

## I. முன்னுரை

போக்குவரத்து, எந்தவொரு பொருளாதார வளர்ச்சியின் வேகத்தில் முக்கிய பங்கு வகிக்கிறது. போக்குவரத்து, தனிநபர் போக்குவரத்து மற்றும் பொது போக்குவரத்து என மாறுபட்ட முறைகளைக் கொண்டது. பயணிகளின் எண்ணிக்கை ஐந்திலிருந்து ஐநூறும் சில சமயங்களில் அதற்கு மேலும் இருக்கும். சில நாடுகளில், முன்னேற்றத்திற்கான காரணிகள் பொருளாதார நடவடிக்கைகளில் முக்கிய பங்கு வகித்த போதிலும், பொது போக்குவரத்தைவிட தனிநபர் போக்குவரத்திற்கு அதிக அளவில் ஊக்கம் அளிக்கப்பட்டு வருகின்றன. இவை, தனிநபர் போக்குவரத்து அல்லது பொது போக்குவரத்து ஆகியவற்றிற்கிடையேயான வேறுபட்ட நன்மைகளை விவாதிப்பதற்கு வழிவகுக்கிறது.

உலகளவில் பொது போக்குவரத்து பெருகுவதற்கு இரண்டு முக்கிய காரணங்கள் உள்ளன. முதலில்,

கிடைக்கக்கூடிய சாலையின் அளவு மீளா தன்மையுடையது மற்றும் இருக்கும் சாலையை விரிவுப்படுத்துவது என்பது பெரும்பாலான நேரங்களில் அதிக பொருள் செலவுடையதாகும். நிலம் கையகப்படுத்துதல் கடைசி வாய்ப்பாகவே கருதப்படுகிறது. அரசு கொள்கையில், சாலைகளை சிறப்பாக பயன்படுத்திட பொது போக்குவரத்தே தவிர்க்க முடியாததாக உள்ளது. இரண்டாவதாக, நீண்ட தூர பயணத்திற்கு பொது போக்குவரத்து முறைகளே மிகவும் உகந்தவையாகும். மேலும், பயணிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் போது வசதியாகவும் சிக்கனமானதாகவும் இருக்கும். கிராமம் மற்றும் நகர இணைப்பு ஒவ்வொரு ஆண்டும் அதிகரிக்கும் போது, பயணிகள் பொது போக்குவரத்தை தேர்ந்தெடுப்பதற்கு எரிபொருள் செலவு ஒரு காரணமாக அமைகின்றது.

இரயில்வே, விமானம் மற்றும் பேருந்து போக்குவரத்து ஆகியவை முக்கியமான பொது போக்குவரத்துகளாகும். இரயில்வே போக்குவரத்துக்கு ஆரம்ப நிலையில் மிக அதிக முதலீடு தேவைப்படுகிறது மற்றும் இரயில்வே போக்குவரத்தில் சேருமிடம் மற்றும் வழித்தடங்கள் குறைந்த நெகிழ்வுத் தன்மை கொண்டது. இந்தியாவில் இரயில்வே திட்டத்திற்கான

தொடக்க முதலீடு, பராமரிப்பு மற்றும் செயல்பாடுகள் இந்திய அரசின் இரயில்வே துறையிடம் உள்ளது. தமிழக அரசின் போக்குவரத்துத் துறை, இரயில்வே திட்டங்களுக்கான தொடர்புத் துறையாகும் மற்றும் இத்துறை நிலம் கையகப்படுத்துவதற்கு உதவிபுரிகின்றது. இரயில்வே திட்டங்களுக்கான நிலம் கையகப்படுத்துவதற்கு ஆகும் நிதியினை முற்றிலுமாக இந்திய இரயில்வே துறையே வழங்குகின்றது. நிலம் கையகப்படுத்துவதற்கு தேவையான பணியாளர்கள் முதல் மாவட்ட அளவிலான ஒருங்கிணைப்பு மற்றும் நிலங்களை ஒப்படைத்தல் வரையிலான இதர பணிகளை தமிழக அரசு வழங்குகின்றது. இவற்றில், நிலம் கையகப்படுத்துவதில் மாவட்ட ஆட்சியர் மற்றும் நில நிர்வாக ஆணையர் ஆகியோர் முக்கிய பங்கு வகிக்கின்றனர். இவை அனைத்திற்கும் போக்குவரத்துத் துறையே நிர்வாகத் துறையாக விளங்குகின்றது.

தமிழக அரசு, இரயில்வே துறையைப் போலவே விமானப் போக்குவரத்து அமைச்சகம் மற்றும் இந்திய வானூர்தி நிலையங்கள் ஆணையத்திற்கும் உதவுகின்றது. பெரிய விமான நிலையங்களுக்கான நிலஎடுப்புப் பணிகளை தமிழக அரசு செய்வதுடன் அதற்குண்டான

செலவுகளையும் ஏற்கின்றது. தமிழ்நாட்டில் வேலை வாய்ப்புகளை அதிகரிக்கும் நோக்கில், தற்போது இயங்கும் விமான நிலையங்களில் விமானம் இறங்குவதற்கான இடப்பரப்பினை அதிகப்படுத்துவதன் மூலம் போதுமான பராமரிப்பு, பழுது நீக்குதல் மற்றும் புதுப்பித்தல் போன்ற நடவடிக்கைகளும், இதைத்தவிர பெரிய விமானங்கள் இயக்குவதற்கும், வழிகோலும். இதன் மூலம், சரக்கு விமானப் போக்குவரத்து மற்றும் பயணிகள் விமானப் போக்குவரத்தினை விமான நிலையங்கள் அதிக அளவில் கையாள்வதன் மூலம் அந்தந்த பகுதிகளின் வளர்ச்சி அதிகரிக்கும்.

பொது போக்குவரத்தில் பேருந்து போக்குவரத்தே கடைகோடி வரை இணைப்பை வழங்குகின்றது மற்றும் பேருந்து போக்குவரத்து பொது மக்களை அவர்களின் சேருமிடத்திற்கு மிக அருகாமையில் அழைத்துச் செல்லும். பேருந்து போக்குவரத்து, பொது மக்களின் வாழ்வில் முக்கிய பங்காற்றுகின்றன மற்றும் தமிழ்நாட்டின் உயிர்நாடியாக விளங்குகின்றன. இந்தியா ஒரு பல்வேறுபட்ட கலாச்சாரங்களைக் கொண்ட நாடாகும். சில மாநிலங்கள் தமது ஆளுமைக்கு உட்பட்ட நகர மற்றும் கிராமங்களின் வளர்ச்சி அடைவதற்கு சிறந்த பேருந்து போக்குவரத்தினை

முன்னிலைப்படுத்துவதை அங்கீகரிக்கின்றன. தமிழ்நாடும் அதுபோன்ற ஒரு மாநிலமாகும். தமிழ்நாடு வலுவான பேருந்து போக்குவரத்து அமைப்பை கொண்டுள்ளது அவற்றில், அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றது. இவ்வரசுப் போக்குவரத்துக் கழகங்கள் மாநிலத்திலுள்ள அனைத்து நகரங்கள் மற்றும் கிராமங்களுக்கு சேவை வழங்குவதுடன் அவற்றை தொலைதூர வழித்தடங்களுடன் இணைக்கவும் செய்கின்றன. மேலும், அண்டை மாநிலங்களுக்கும் சேவைகள் வழங்குகின்றன.

பின்வரும் அத்தியாயங்களில் அரசு போக்குவரத்துக் கழகங்கள் செய்கின்ற பணிகளின் விவரங்கள் இடம்பெறுகின்றன. மாநிலத்தில் இரயில்வே மற்றும் விமானப் போக்குவரத்தின் பங்கு, அதன் மூலம் ஏற்படும் முன்னேற்றம் மற்றும் பேருந்து போக்குவரத்து சேவையின் மூலம் வழங்கப்படும் சேவைகளின் விபரங்களும் இடம் பெறுகின்றன.

## II. போக்குவரத்துத் துறையின் நிர்வாக அமைப்பு

அரசு கூடுதல் தலைமைச் செயலாளரின் தலைமையின் கீழ், 2 துணைச் செயலாளர்கள், 4 சார்புச் செயலாளர்கள் மற்றும் 69 நிர்வாகப் பணியாளர்களுடன், போக்குவரத்துக்

கழக தலைவர் அலுவலகத்திலுள்ள 3 அலுவலர்கள் மற்றும் 8 பணியாளர்களைக் கொண்டு போக்குவரத்துத்துறை செயல்பட்டு வருகின்றது. அனைத்து அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் அலுவல் வழித் தலைவராகவும், தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநராகவும், போக்குவரத்துத் துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் செயல்படுகிறார். போக்குவரத்துத் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் பின்வரும் அமைப்புகள் செயல்படுகின்றன.

1) ஏழு அரசுப் போக்குவரத்துக் கழகங்கள். (இரு போக்குவரத்துக் கழகங்களை இணைப்பதற்கான ஆணை நடப்பு நிதியாண்டில் வெளியிடப்பட்டு, அதற்குரிய நடவடிக்கைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன).

2) தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம்.

3) சாலை போக்குவரத்து நிறுவனம்.

4) பல்லவன் போக்குவரத்து அறிவுரைப் பணிக்குழு.

5) தமிழ்நாடு மோட்டார் வாகனப் பராமரிப்புத்துறை.

6) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழக ஊழியர்களின் ஓய்வூதிய நிதி பொறுப்பாட்சி.

தமிழகத்தில், கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஏழு அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் உள் மற்றும் வெளி மாநிலங்களுக்கான போக்குவரத்துச் சேவைகளை வழங்கி வருகின்றன:–

1) மாநகர் போக்குவரத்துக் கழகம் (சென்னை) லிமிடெட், சென்னை.

2) அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் தமிழ்நாடு லிமிடெட், சென்னை.

3) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) லிமிடெட், விழுப்புரம்.

4) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (சேலம்) லிமிடெட், சேலம்.

5) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (கோயம்புத்தூர்) லிமிடெட், கோயம்புத்தூர்.

6) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிமிடெட், கும்பகோணம்.

7) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிமிடெட், மதுரை. (தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (திருநெல்வேலி) லிமிடெட், திருநெல்வேலி,தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிமிடெட், மதுரையுடன் இணைக்கப்பட்டு, அதற்குரிய நடவடிக்கைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.)

# அத்தியாயம்–1

## அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் பற்றிய ஒரு கண்ணோட்டம்

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் மூலம் 31.03.2018 அன்றுள்ளவாறு, 2,254 உபரிப் பேருந்துகள் உட்பட, 21,744 பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

31 மார்ச் 2018 வரையில், வரையறுக்கப்பட்ட பேருந்து சேவைகளின் எண்ணிக்கை 19,490 ஆகும். அரசுப் போக்குவரத்துக் கழகங்கள், தங்களுடைய இயக்க எல்லையினை கர்நாடகா, ஆந்திரா, கேரளா ஆகிய மாநிலங்களுக்கும், மத்திய ஆட்சிப் பகுதியான புதுச்சேரிக்கும் விரிவுபடுத்தியுள்ளன. அனைத்து அரசுப் போக்குவரத்துக் கழகங்களும், நாளொன்றுக்குச் சராசரியாக 87.22 இலட்சம் கிலோ மீட்டர் தூரத்திற்குப் பேருந்துகளை இயக்குகின்றன. 31.03.2018 அன்றுள்ளவாறு, அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களிலும் பணியாற்றும் பதிலிப் பணியாளர்களையும் சேர்த்து மொத்தப் பணியாளர்களின் எண்ணிக்கை 1,37,408 ஆகும்.

அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் செயல்பாட்டுத் திறனை மேம்படுத்த, அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. இதனால், செயல்பாட்டுத் திறன் குறியீடுகள் சாதகமான சூழலை ஏற்படுத்தியுள்ளன. மார்ச் 2011–ல், ஒரு லிட்டருக்கு 5.25 கிலோ மீட்டராக இருந்த எரிபொருள் இயக்கத்திறன், மார்ச் 2018–ல், ஒரு லிட்டருக்கு 5.33 கிலோ மீட்டராக உயர்ந்துள்ளது. கழிவு செய்யப்பட்ட உருளிப்பட்டை ஒன்றுக்கு ஓடிய தூரம் மார்ச் 2011–இல் இருந்த அளவுகோல் 1.65 இலட்சம் கிலோமீட்டரிலிருந்து மார்ச் 2018–இல் 2.22 இலட்சம் கிலோமீட்டராக உயர்ந்துள்ளது.

## 1.1 அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் அலகுகள்

அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் பின்வரும் அலகுகளைக் கொண்டுள்ளன.

| பணிமனைகள் (கிராமம் மற்றும் நகர்ப்புறம்) | இயந்திர மறுசீரமைப்பு பிரிவு மற்றும் தொழிற் கூடங்கள் | பேருந்து கூண்டு கட்டும் பிரிவுகள் | உருளிப்பட்டை (Tyre) புதுப்பிக்கும் தொழிற்கூடங்கள் | பேருந்து தரச்சான்று அளிக்கும் பிரிவுகள் |
|---|---|---|---|---|
| 323 | 20 | 23 | 18 | 50 |

## 1.2 பேருந்துக் கட்டணம்

தமிழ்நாட்டில், 2011–ஆம் ஆண்டுக்குப் பின் 20.01.2018 அன்று முதல் பேருந்துக் கட்டணம் மாற்றி அமைக்கப்பட்டது.

பின்னர், மாற்றியமைக்கப்பட்ட பேருந்துக் கட்டணத்தில் **29.01.2018** அன்று சிறிதளவு குறைக்கப்பட்டது. **2011–**க்குப்பின் நமது அண்டை மாநிலங்களான ஆந்திரபிரதேசம் மற்றும் கேரளாவில் முறையே மூன்று மற்றும் நான்கு முறையும், கர்நாடகாவில் நான்கு முறையும் பேருந்து கட்டணங்கள் திருத்தியமைக்கப்பட்டுள்ளன. இந்த மாநிலங்கள் தொடர்ந்து பேருந்துக் கட்டணங்களை உயர்த்தினாலும், கடந்த ஆறு ஆண்டுகளில் தமிழ்நாடு அரசு பேருந்துக் கட்டணத்தை ஒரு முறை மட்டுமே உயர்த்தியுள்ளது. பிற மாநிலங்களில் தற்போது நடைமுறையிலுள்ள பேருந்துக் கட்டண ஒப்பு நோக்கு அட்டவணை பின்வருமாறு :–

**2011–இல் உள்ள பேருந்து கட்டணம்**

(ஒரு கி.மீ. கட்டணம் பைசாவில்)

| மாநிலம் | கட்டண விகிதம் அமலுக்கு வந்த தேதி | புறநகர் (சாதா–ரணம்) | விரைவு / சொகுசு | அதி சொகுசு | அதி நவீன சொகுசு | குளிர் சாதனம் |
|---|---|---|---|---|---|---|
| தமிழ்நாடு | 18.11.2011 | 42 | 56 | 60 | 70 | 90 |
| ஆந்திர பிரதேசம் | 16.07.2011 | 50 | 62 | 82 | 82 | 140 |
| கேரளா | 08.03.2010 | 55 | 57 | 65 | 90 | 90 |
| கர்நாடகம் | 26.06.2011 | 46.44 | 68.71 | 83 | 105.16 | 137.72 |

**2018–இல் உள்ள பேருந்து கட்டணம்**

(ஒரு கி.மீ. கட்டணம் பைசாவில்)

| மாநிலம் | கட்டண விகிதம் அமலுக்கு வந்த தேதி | புறநகர் (சாதா–ரணம்) | விரைவு / சொகுசு | அதி சொகுசு | அதி நவீன சொகுசு | குளிர் சாதனம் | வால்வோ |
|---|---|---|---|---|---|---|---|
| தமிழ்நாடு | 29.01.2018 | 58 | 75 | 85 | 100 | 130 | 170 |
| ஆந்திர பிரதேசம் | 24.10.2015 | 63.70 | 87 | 98 | 116 | 146 | 182 |
| கேரளா | 01.03.2018 | 75 | 78 | 85 | 100 | 120 | 145 |
| கர்நாடகம் | 10.01.2015 | 59 | 90 | 112 | 131 | 177 | 190 |

**(பிற்சேர்க்கை 1–இல் காண்க)**

## 1.3 அரசுப் போக்குவரத்துக் கழகங்களால் இயக்கப்படும் பேருந்துச் சேவைகள்

**31.03.2018** அன்றுள்ளவாறு, அரசுப் போக்குவரத்துக் கழகங்களால், பயணிகளின் நலனுக்காக இயக்கப்படும் பேருந்துகளின் எண்ணிக்கையின் விவரங்கள் பின்வருமாறு:–

| | |
|---|---|
| சென்னை மாநகர் – நகரப் பேருந்துகள் | **3,439** |
| நகரப் பேருந்துகள் (மாவட்டங்களில்) | **6,647** |
| புறநகர்ப் பேருந்துகள் | **7,819** |
| மலைப்பகுதி பேருந்துகள் | **501** |

| விரைவுப் பேருந்துகள் | |
|---|---|
| மாநிலத்திற்குள் | 636 |
| வெளிமாநிலங்களுக்கு | 448 |
| மொத்த இயக்கப் பேருந்துகளின் எண்ணிக்கை | 19,490 |
| மொத்த இயக்கப் பேருந்துகளுக்கான உபரிப் பேருந்துகள் | 2,254 |
| **மொத்தப் பேருந்துகள்** | **21,744** |

**(பிற்சேர்க்கை 2–இல் காண்க)**

## 1.4 செயல்பாட்டு திறன் குறியீடுகள்

வழித்தடங்கள் பகுப்பாய்வின் மூலம் வருவாயை மேம்படுத்தவும், செலவுகளை குறைக்கவும் முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அதற்கேற்றாற்போல் இயக்கப்பட வேண்டிய பேருந்துகள் மற்றும் இயக்கப்படும் கிலோ மீட்டர் முறைப்படுத்தப்பட்டு, டீசல் மற்றும் உருளிப்பட்டைக்கான (Tyre) மாறுபடும் செலவினங்கள் முடிந்தவரையில் குறைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட செயல்பாடுகள் பயணிகளுக்கு அதிக பயன்களை பெற உறுதிசெய்யும்.

**2011–12** முதல் **2017–18** வரையிலான ஆண்டுகளில் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளின் இயக்கச் செயல்பாட்டுதிறன் குறியீடுகளின் விவரங்கள் பின்வருமாறு :–

| பொருள் | 2011–12 | 2012–13 | 2013–14 | 2014–15 | 2015–16 | 2016–17 | 2017–18 |
|---|---|---|---|---|---|---|---|
| பேருந்துகளின் எண்ணிக்கை | 21,207 | 22,053 | 22,501 | 22,474 | 23,078 | 22,533 | 21,744 |
| இயக்கப்படும் பேருந்துகள் | 19,507 | 20,500 | 20,684 | 20,684 | 20,839 | 20,776 | 19,490 |
| ஒரு நாளைக்கு இயக்கப்படும் மொத்த தூரம் (இலட்சம் கி.மீ) | 88.44 | 89.78 | 91.20 | 90.21 | 94.02 | 92.55 | 87.22 |
| பழுதுபடுதல் (10,000 கிலோ மீட்டருக்கு) | 0.01 | 0.01 | 0.01 | 0.004 | 0.004 | 0.004 | 0.003 |
| விபத்துகள் (1,00,000 கிலோ மீட்டருக்கு) | 0.22 | 0.20 | 0.20 | 0.18 | 0.18 | 0.16 | 0.15 |
| உயிரிழப்பு விபத்துகள் | 1,237 | 1,233 | 1,187 | 1,165 | 1,258 | 1,209 | 1,085 |
| இறந்தவர்களின் எண்ணிக்கை | 1,397 | 1,382 | 1,318 | 1,331 | 1,460 | 1,373 | 1,247 |
| எரிபொருள் செயல் திறன் (கி.மீ/லிட்டருக்கு) சராசரியாக | 5.25 | 5.27 | 5.26 | 5.30 | 5.29 | 5.33 | 5.33 |
| கழிவு செய்யப்பட்ட உருளிப்பட்டை ஓடிய தூரம் (இலட்சம் கிலோ மீட்டர்) | 1.65 | 1.80 | 1.82 | 1.92 | 2.01 | 2.08 | 2.22 |
| இயக்க வேண்டிய ஒரு பேருந்துக்குப் பணியாளர்கள் விகிதம் (தொழிற்கூடப் பணியாளர்கள் உட்பட) | 6.40 | 6.31 | 6.43 | 6.48 | 6.52 | 6.51 | 6.82 |

**(பிற்சேர்க்கை 3–இல் காண்க)**

## 1.5 இயக்கச் செலவு

ஒவ்வொரு ஆண்டும் டீசல் விலை உயர்வு மற்றும் நிர்வாகச் செலவு அதிகரிப்பினால் அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் இயக்கச் செலவுகள் அதிகரித்துள்ளது. 2017–2018–ஆம் ஆண்டிற்கான பல்வேறு செலவினங்களின் விவரம் சதவீதத்தில் கீழ்வருமாறு:–

| வ. எண். | இயக்கச் செலவு வகைகள் | சதவீதத்தில் |
|---|---|---|
| 1 | சம்பளம் | 51.64 |
| 2 | டீசல் | 27.72 |
| 3 | பழுது பார்த்தல் மற்றும் பராமரிப்பு | 3.03 |
| 4 | தேய்மானம் | 1.55 |
| 5 | மோட்டார் வாகன விபத்து இழப்பீடு, சுங்கச்சாவடிக் கட்டணம் மற்றும் பிற இனங்கள் | 6.31 |
| 6 | வட்டி | 8.17 |
| 7 | வரிகள் | 1.58 |
| | **மொத்தம்** | **100.00** |

## 1.6 அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் வருவாய்

டீசல் விலை அடிக்கடி உயர்ந்து வருவதாலும், உதிரி பாகங்களின் விலை உயர்வாலும், ஊதிய ஒப்பந்தத்தாலும் மற்றும் தொழிலாளர்களுக்கான அகவிலைப்படி உயர்வு வழங்குவதாலும் போக்குவரத்துக் கழகங்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் கூடுதல் செலவினங்கள் ஏற்படுகின்றன. அரசுப்

பேருந்துகளின் கட்டண வசூல், விளம்பரங்கள், குடிநீர் விற்பனை, விரைவுத் தூதஞ்சல் சேவை, வாடகைக் கட்டணங்கள் மற்றும் வணிக வளாகங்கள் போன்ற இனங்கள் வாயிலாகக் கடந்த ஆறு ஆண்டுகளில் ஈட்டிய வருவாய் விவரங்கள் பின்வருமாறு :–

(ரூபாய் கோடியில்) / நாள் ஒன்றுக்கு

| ஆண்டு | நாளொன்றுக்குப் பேருந்துக் கட்டண வசூல் | இதர வருவாய் | மொத்த வருவாய் |
|---|---|---|---|
| 2012–2013 | 19.87 | 3.01 | 22.88 |
| 2013–2014 | 20.12 | 4.59 | 24.71 |
| 2014–2015 | 20.50 | 4.41 | 24.91 |
| 2015–2016 | 20.76 | 2.77 | 23.53 |
| 2016–2017 | 20.76 | 4.91 | 25.67 |
| 2017–2018 (துணிக்கைக்கு முன்) | 21.36 | 4.99 | 26.35 |

**(பிற்சேர்க்கை 4–இல் காண்க)**

### 1.7 அரசு வழங்கிய நிதியுதவி விவரங்கள்

அரசு கடந்த ஏழு ஆண்டுகளில் **(2011–2018)**, பங்கு மூலதன உதவி (Share Capital Assistance), கடன் (Loan), வழிவகை முன்பணம் (Ways & Means Advance), உதவித்தொகை (Grant), மாணவர் கட்டணச்

சலுகையை ஈடுசெய்தல் (Reimbursement of Student Concession Subsidy) ஆகிய வகைகளில் ரூ.12,225.27 கோடியினை அனைத்து அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கும் வழங்கியுள்ளது. அவற்றின் விவரம் பின்வருமாறு

**அ) பங்கு மூலதன உதவி**

(ரூபாய் கோடியில்)

| ஆண்டு | புதிய பேருந்துகள் | பயணச்சீட்டு இயந்திரங்கள் | புத்தகக் கணக்குகளில் நிலுவைத் தொகையைக் குறைக்க நடைமுறை மூலதனமாக / மூலதனச் செலவினத்தைச் சரிசெய்தல் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 2011–12 | 155.26 | 7.03 | – | 162.2900 |
| 2012–13 | 150.00 | 24.63 | – | 174.6300 |
| 2013–14 | – | – | 350.0000 | 350.0000 |
| 2014–15 | 125.00 | – | 228.0000 | 353.0000 |
| 2015–16 | – | – | 150.0000 | 150.0000 |
| 2016–17 | 150.00 | – | – | 150.0000 |
| மொத்தம் | **580.26** | **31.66** | **728.0000** | **1339.9200** |

அண்மையில், நிலுவையில் உள்ள வழி வகை முன்பணம் மற்றும் அதன் வட்டி ரூ.3001.4717 கோடியினை மூலதனப் பங்காக அரசால் மாற்றப்பட்டுள்ளது.

## ஆ) கடன்கள் மற்றும் வழிவகை முன்பணங்கள்

(ரூபாய் கோடியில்)

| ஆண்டு | புதிய பேருந்துகள் | பேருந்து–களைப் புதுப்பித்தல் | மோட்டார் வாகன விபத்து வழக்குத் தொகை | டீசல் | ஊதிய ஒப்பந்தம் /ஊக்கத் தொகை/ அகவிலைப்படி நிலுவை | ஓய்வு பெற்றவர்–களின் பணப்பலன் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| 2011–12 | 137.50 | 24.395 | 25.00 | 81.03 | 178.1400 | 0 | 446.0650 |
| 2012–13 | 0 | 0 | 13.91 | 0 | 0 | 0 | 13.910 |
| 2013–14 | 0 | 24.395 | 0 | 0 | 0 | 0 | 24.3950 |
| 2014–15 | 81.61 | 0 | 39.73 | 0 | 0 | 0 | 121.3400 |
| 2015–16 | 125.00 | 0 | 0 | 0 | 360.0000 | 116.0000 | 601.0000 |
| 2016–17 | 57.34 | 0 | 0 | 0 | 198.4500 | 0 | 255.7900 |
| 2017–18 | 0 | 0 | 385.23 | 0 | 261.6302 | 2247.3858 | 2894.2460 |
| மொத்தம் | **401.45** | **48.790** | **463.87** | **81.03** | **998.2202** | **2363.3858** | **4356.7460** |

## இ) உதவித் தொகை

(ரூபாய் கோடியில்)

| ஆண்டு | மோட்டார் வாகன விபத்து வழக்குத் தொகை | டீசல் | விபத்தின்றிப் பணிபுரிந்த ஓட்டுநர்களுக்கு முதலமைச்சரின் விருது | மொத்தம் |
|---|---|---|---|---|
| 2011–12 | 20.00 | – | 2.78 | 22.78 |
| 2012–13 | 20.00 | 200.00 | 2.78 | 222.78 |
| 2013–14 | 20.00 | 500.00 | 1.60 | 521.60 |
| 2014–15 | 20.00 | 600.00 | 2.78 | 622.78 |
| 2015–16 | 30.00 | 256.72 | 2.78 | 289.50 |
| 2016–17 | 30.00 | 617.17 | 5.88 | 653.05 |
| 2017–18 | 30.00 | 816.12 | 3.86 | 849.98 |
| மொத்தம் | **170.00** | **2990.01** | **22.46** | **3182.47** |

**ஈ) மாணவர், மூத்த குடிமக்கள் மற்றும் இதர பயணச் சலுகைக்கான கட்டணங்களை ஈடுசெய்தல்**

**2011–2012** முதல் **2017–2018** வரையிலான ஆண்டுகளில் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு (அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் தவிர) மாணவர் பயண கட்டணச் சலுகையை ஈடுசெய்வதற்காக ரூ.**3,319.58** கோடியும், மூத்த குடிமக்களுக்கான பயணச் சலுகையை ஈடுசெய்வதற்காக மாநகர் போக்குவரத்துக் கழகத்திற்கு ரூ.**22.89** கோடியும் மற்றும் இதர பயணச் சலுகைகளை ஈடுசெய்வதற்கு அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு ரூ.**3.66** கோடியும் அரசால் வழங்கப்பட்டுள்ளது.

**1.8 உயர்வேக டீசல் (HSD) ஈடுசெய்தல்**

உயர்வேக டீசலுக்கான விலை லிட்டருக்கு **6.07** ரூபாயாக **14.09.2012** அன்று முதல் அதிகரித்தது. உயர்வேக டீசல் விலை அதிகரிப்பினால் அரசு போக்குவரத்துக் கழகங்களுக்குக் கூடுதல் செலவினம் ஏற்பட்டது. நவம்பர் **2011**–இல் நிர்ணயிக்கப்பட்ட பேருந்துக் கட்டணத்தை உயர்த்தாமல் தொடர்ந்து பழைய கட்டணத்தையே தொடர்ந்ததால், அரசுப் போக்குவரத்துக் கழகங்களால் இந்த

கூடுதல் செலவினத்தை சமாளிக்க இயலவில்லை. அதிவேக டீசல் விலையின் உயர்வினால் ஏற்பட்ட கூடுதல் செலவினத்தை ஈடுசெய்ய போக்குவரத்துக் கழகங்களுக்கு **2012–2013–**இல் ரூ.**200** கோடியும், **2013–2014–**இல் ரூ.**500** கோடியும், **2014–2015–**இல் ரூ.**600** கோடியும், **2015–2016–**இல் ரூ.**256.72** கோடியும், **2016–2017–**இல் ரூ.**617.17** கோடியும், அரசு இழப்பீடு வழங்கியுள்ளது. **2017–2018–**ஆம் ஆண்டில், பேருந்துக் கட்டணம் மாற்றியமைக்கப்பட்ட நாளான **20.01.2018** வரை அரசு ரூ.**816.12** கோடியினை வழங்கியுள்ளது.

## அத்தியாயம்–2

## சாலைப் பாதுகாப்பு நடவடிக்கைகள்

### 2.1 சாலை விபத்துக்களைக் குறைக்க நடவடிக்கைகள்

தமிழகத்தில் விரைவான நகரமயமாதலின் காரணமாக வாகனங்களின் பயன்பாடு உயர்ந்ததால், சாலை விபத்துகளைக் குறைப்பதற்கு அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் கீழ்க்காணும் சிறப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன:

(i) வாகனம் ஓட்டும்பொழுது கைபேசி உபயோகித்தல் மற்றும் மது அருந்துதல் ஆகியவை முற்றிலும் தடை செய்யப்பட்டுள்ளன.

(ii) போக்குவரத்து மற்றும் காவல் துறையின் பறக்கும்படை உதவியுடன் சுவாசப் பரிசோதனைக் கருவிகளைக் கொண்டு, பணியில் மது அருந்தியிருப்பவர்களைக் கண்டறிய திடீர் சோதனைகள் நடத்தப்படுகின்றன.

(iii) ஓட்டுநர்கள் மற்றும் நடத்துநர்கள் நன்கு ஓய்வு எடுக்கும் வகையில், ஓய்வு அறைகளின் தரம் நவீன வசதிகளுடன் மேம்படுத்தப்பட்டு வருகின்றன.

(iv) மாநில நெடுஞ்சாலைத் துறை மற்றும் காவல்துறை உதவியுடன் சாலை வசதியை மேம்படுத்துதல், அடிக்கடி விபத்து ஏற்படும் பகுதிகளில் போக்குவரத்து தொடர்பான எச்சரிக்கைக் குறியீட்டு அறிவிப்புப்

பலகைகளை நிறுவுதல் ஆகியவற்றின் மூலம் விபத்து ஏற்படுவதைத் தடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

(v) விபத்தின்றிப் பணிபுரியும் அரசுப் போக்குவரத்துக் கழக ஓட்டுநர்களை ஊக்குவிக்கும் பொருட்டு முதலமைச்சரின் விருதுகள் வழங்கப்படுகின்றன. இவ்விருதுக்காக, **2011–2018**–ஆம் ஆண்டுகளில் ரூ.**22.46** கோடி அரசால் கீழ்க்கண்டவாறு வழங்கப்பட்டுள்ளது:–

(ரூ. கோடியில்)

| ஆண்டு | தொகை |
|---|---|
| 2011–2012 | 2.78 |
| 2012–2013 | 2.78 |
| 2013–2014 | 1.60 |
| 2014–2015 | 2.78 |
| 2015–2016 | 2.78 |
| 2016–2017 | 5.88 |
| 2017–2018 | 3.86 |
| **மொத்தம்** | **22.46** |

(vi) தொடர் விபத்துகள் மூலம் உயிரிழப்பு ஏற்படக் காரணமாக இருக்கும் ஓட்டுநர் மீது கடுமையான நடவடிக்கை எடுப்பது என்ற ஒரே மாதிரியான நிலைப்பாட்டினை அனைத்து அரசுப் போக்குவரத்துக் கழகங்களும் பின்பற்றுகின்றன.

(vii) **2017–2018–ஆம் ஆண்டில் விபத்துகளின் எண்ணிக்கை மற்றும் அதனால் ஏற்படும் உயிரிழப்புகள் கணிசமாக குறைந்துள்ளது.**

கடந்த ஐந்து ஆண்டுகளில் உயிரிழப்பு ஏற்படுத்திய விபத்துகளின் விவரங்கள் பின்வருமாறு:–

| ஆண்டு | இயக்கப்பட்ட பேருந்துகளின் எண்ணிக்கை | உயிரிழப்பு ஏற்படுத்திய விபத்துகளின் எண்ணிக்கை | உயிரிழப்புகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 2013–2014 | 20,684 | 1,187 | 1,318 |
| 2014–2015 | 20,684 | 1,165 | 1,331 |
| 2015–2016 | 20,839 | 1,258 | 1,460 |
| 2016–2017 | 20,776 | 1,209 | 1,373 |
| 2017–2018 | 19,490 | 1,085 | 1,247 |

## 2.2 விபத்து இழப்பீட்டுத் தொகை நிதியம்

அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளால் ஏற்படும் விபத்தில் காயமடைந்தவர்களுக்கும், உயிரிழந்தவர்களின் வாரிசுதாரர்களுக்கும், நீதிமன்றத்தை நாடாமல் விரைவாக விபத்து இழப்பீட்டை வழங்கும் பொருட்டு விபத்து இழப்பீட்டுத் தொகை நிதியம்(Corpus Fund) ஒன்று **2010**–ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.

அதன்படி, **2010–11, 2011–12, 2012–13, 2013–14** மற்றும் **2014–15** ஆகிய ஆண்டுகளில் முறையே அரசின் பங்காக ஆண்டொன்றுக்கு ரூ.**20** கோடியும், அனைத்து அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் பங்காக ரூ.**20** கோடியும், ஆகமொத்தம் ரூ.**40** கோடியில் விபத்து இழப்பீட்டுத் தொகை நிதியம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த விபத்து இழப்பீட்டுத் தொகை நிதி **2015–16**–ஆம் ஆண்டு முதல் ரூ.**40** கோடியிலிருந்து ரூ.**60** கோடியாக உயர்த்தப்பட்டு, இதில், அரசின் பங்களிப்பாக ரூ.**30** கோடியும், அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்களின் பங்களிப்பாக ரூ.**30** கோடியும் வழங்கப்படுகின்றது. மேற்படி நிதியம், தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தால் நிர்வகிக்கப்படுகிறது. அதிக எண்ணிக்கையிலான விபத்து இழப்பீடுகள் கோரப்படுவதால் இந்நிதி போதுமானதாக இல்லை. எனவே, இவ்விடைவெளியினை சரிசெய்ய ஒரு தனி அணுகுமுறை நடப்பாண்டில் அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

**20.01.2018** முதல் பேருந்து பயணிகளிடம் கீழ்க்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு தீர்வை வசூல் செய்து அதனைக் கொண்டு விபத்து இழப்பீடு, விபத்து தடுப்பு மற்றும் சுங்கக் கட்டணத்திற்கான ஒருங்கிணைந்த நிதியம் உருவாக்க தற்போது அரசால் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

| விபத்து / சுங்க வரி பயணிகளிடமிருந்து வசூலிப்பது | | | |
|---|---|---|---|
| வ. எண். | பயண கட்டண வரம்பு | நகர் | புறநகர் |
| | | பயணிகளிடமிருந்து தீர்வை ரூபாயில் | பயணிகளிடமிருந்து தீர்வை ரூபாயில் |
| 1 | ரூ.25 வரை | 1 | 1 |
| 2 | ரூ.26 முதல் ரூ.50 வரை | -- | 2 |
| 3 | ரூ.51 முதல் ரூ.75 வரை | -- | 3 |
| 4 | ரூ.76 முதல் ரூ.100 வரை | -- | 4 |
| 5 | ரூ.101 முதல் ரூ.200 வரை | -- | 5 |
| 6 | ரூ.201 முதல் ரூ.300 வரை | -- | 6 |
| 7 | ரூ.301 முதல் ரூ.400 வரை | -- | 7 |
| 8 | ரூ.401 முதல் ரூ.500 வரை | -- | 8 |
| 9 | ரூ.501 –க்கு மேல் | -- | 10 |

அரசுப் போக்குவரத்துக் கழக பேருந்துகளால் ஏற்படும் விபத்துகளின் மூலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு அவர்களின் இசைவுடன் (consent) கீழே குறிப்பிட்டுள்ளவாறு இழப்பீட்டுத் தொகை உடனடியாக வழங்கப்படும்.

**உயிரிழப்பிற்கான இழப்பீட்டுத் தொகை**

(ரூபாய் இலட்சத்தில்)

| வயது வரம்பு | தொகை |
|---|---|
| 1 – 15 | 2.5 |
| 16 – 60 | 5.0 |
| 60 வயதுக்கு மேல் | 2.5 |

**காயங்களுக்கான இழப்பீட்டுத் தொகை**

| | | |
|---|---|---|
| 1) | சிறுகாயம் –I<br>சிறுகாயம் – II<br>மருத்துவமனையில் சிகிச்சை (2 நாட்கள்) | ரூ. 10,000<br>ரூ. 25,000 |
| 2) | தலை காயம் மற்றும் நிரந்தர உறுப்பு இழப்பு | ரூ. 5,00,000 |
| 3) | கொடுங்காயம் மற்றும் எலும்பு முறிவு – மருத்துவமனை தீவிர சிகிச்சை (7 நாட்கள்)<br><br>எலும்பு முறிவு – மருத்துவமனை தீவிர சிகிச்சை (4 நாட்கள்) | ரூ. 2,00,000<br><br>ரூ. 1,00,000 |

விபத்து இழப்பீட்டினை விரைவாக பாதிக்கப்பட்டவர்களுக்கு அவர்களின் இசைவுடன் நீதிமன்றத்திற்கு அப்பாற்பட்டு வழங்கும் பொருட்டு ஒரு குழுவும் மற்றும் இழப்பீடு தொகை வழங்குவதற்கான வழிமுறையும் அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

## 2.3 மக்கள் நீதிமன்றம்

மக்கள் நீதிமன்றத்தின் மூலம் தீர்வு செய்யப்பட்ட விபத்து இழப்பீட்டு வழக்குகளுக்கு அனைத்து அரசுப் போக்குவரத்துக் கழகங்களும் தொகுப்பு நிதியிலிருந்து இழப்பீடு வழங்கி வருகின்றன. அதன்படி, கடந்த ஏழு ஆண்டுகளில், தீர்வு செய்யப்பட்ட வழக்குகளுக்கு அரசுப் போக்குவரத்துக் கழகங்களினால் வழங்கப்பட்ட தொகையின் விவரம் பின்வருமாறு:–

**(ரூ. இலட்சத்தில்)**

| ஆண்டு | வழக்குகளின் எண்ணிக்கை | மக்கள் நீதிமன்றம் மூலமாகத் தீர்வு செய்யப்பட்ட தொகை |
|---|---|---|
| 2011–2012 | 884 | 997.21 |
| 2012–2013 | 1,867 | 3,466.29 |
| 2013–2014 | 1,160 | 569.22 |
| 2014–2015 | 897 | 1, 028.14 |
| 2015–2016 | 479 | 1 ,222.62 |
| 2016–2017 | 404 | 1,241.25 |
| 2017–2018 | 1,187 | 4,883.14 |
| மொத்தம் | **6,878** | **13,407.87** |

**22.04.2018** அன்று நடைபெற்ற மக்கள் நீதிமன்றத்தில் அதிகபட்சமாக வழக்குகள் முடிக்கப்பட்டு **776** நபர்களுக்கு ரூ.**9.68** கோடியினை உயர்நீதிமன்றம் மற்றும் மாவட்ட நீதிமன்றங்கள் வழியாக வழங்கப்பட்டது.

## அத்தியாயம்–3

## பொதுமக்களின் சேவைகளை மேம்படுத்த எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள்

### 3.1 இயக்கப் பேருந்துகள்

கடந்த ஏழு ஆண்டுகளில், அரசுப் போக்குவரத்துக் கழகங்களால் இயக்கப்படும் பேருந்துகளின் எண்ணிக்கை 19,110–லிருந்து 19,490 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. 2017–2018–ஆம் ஆண்டில் வழித்தட சீரமைப்பு நடவடிக்கைகள் சிறந்த முறையில் மேற்கொள்ளப்பட்டன. பொதுவான பேருந்து வழித்தடங்களில் அளவுக்கு அதிகமான பேருந்து சேவை, போக்குவரத்துக் கழகங்களுக்கிடையே நிலவும் ஆரோக்கியமற்ற போட்டி மற்றும் மக்களால் குறைவாக பயன்படுத்தப்படும் வழித்தடங்கள் போன்றவற்றை ஆராய்ந்து 1,286 சேவைகள் ஏற்கனவே இயக்கப்படும் சேவைகளுடன் இணைக்கப்பட்டுள்ளன.

### 3.2 புதிய வழித்தடங்கள் அறிமுகம்

பயணிகளின் நலன் கருதி, கடந்த ஆறு ஆண்டுகளில் 1,525 புதிய வழித்தடங்கள் மாநிலம் முழுவதும் இவ்வரசால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

## 3.3 புதிய பேருந்துகள் அறிமுகம்

அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் உள்ள பயன்படுத்தப்பட இயலாத நிலையிலிருக்கும் மிகவும் பழமையான பேருந்துகளைக் கழிவுசெய்து, கடந்த ஏழு ஆண்டுகளில் **9,153** புதிய பேருந்துகள் வாங்க அரசால் ஆணைகள் வெளியிடப்பட்டன. மேலும், **2011–2018–**ஆம் ஆண்டுகளில், மலை சார்ந்த பகுதிகளுக்கு **208** பேருந்துகளும், **300** சிற்றுந்துகளும் வாங்க அரசால் ஆணைகள் வெளியிடப்பட்டன. அதன் விவரங்கள் பின்வருமாறு :–

| ஆண்டு | பேருந்துகளின் எண்ணிக்கை | மலைப் பகுதிப் பேருந்துகளின் எண்ணிக்கை | சிற்றுந்துகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 2011–2012 | 3000 | – | – |
| 2012–2013 | 2953 | – | 100 |
| 2013–2014 | – | 208 | – |
| 2014–2015 | 1200 | – | 100 |
| 2016–2017 | 2000 | – | 100 |
| மொத்தம் | 9153 | 208 | 300 |

## 3.4 புதிய பணிமனைகள்

அதிகரித்துவரும் பேருந்துகளின் எண்ணிக்கைக்கேற்ப பணிமனைகளின் எண்ணிக்கையை உயர்த்துவதற்கு 74 புதிய பணிமனைகளை அமைக்க அறிவிப்பு வெளியிடப்பட்டது. இதில், 42 பணிமனைகள் ஏற்கெனவே திறக்கப்பட்டுவிட்டன. மேலும், 6 பணிமனைகளின் கட்டுமானப் பணிகள் முடியும் தருவாயில் உள்ளன. மீதமுள்ள பணிமனைகளின் கட்டுமானப் பணிகளையும் விரைந்து முடிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 31.03.2018 அன்றுள்ளவாறு, அரசுப் போக்குவரத்துக் கழகப் பணிமனைகளின் எண்ணிக்கை 323 ஆகும்.

## 3.5 சென்னையில் சிற்றுந்துகள் அறிமுகம்

பேருந்து வசதிகள் இல்லாத பகுதிகளை பிரதானச் சாலைகளுடன் இணைப்பதற்கு வசதியாக சென்னை மற்றும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளில், 82 வழித்தடங்களில் 189 சிற்றுந்துகள், 21 உபரி சிற்றுந்துகளுடன் மாநகரப் போக்குவரத்துக் கழகத்தால் இயக்கப்பட்டு வருகின்றன. இப்பேருந்துகள், மக்களிடம் பெரும் வரவேற்பை பெற்றுள்ளன.

100 சிற்றுந்துகளை கூடுதலாக விரைவில் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

### 3.6 மகளிர் சிறப்புப் பேருந்துகள்

சென்னையில் பரபரப்பான நேரங்களில் மகளிர் மற்றும் சிறுவர்கள் பயன்பெறும் வகையில் பயணம் செய்ய, மாநகரப் போக்குவரத்துக் கழகம் **93** வழித்தடங்களில் **253** மகளிர் மற்றும் சிறுவர்கள் சிறப்புப் பேருந்துகளை இயக்கி வருகிறது.

### 3.7 மாற்றுத்திறனாளிகளுக்கான பேருந்துகள்

மாற்றுத்திறனாளிகளின் வசதிக்காக முதன் முறையாக, **10** நட்புப் பேருந்துகள் இவ்வரசால் அறிமுகப்படுத்தப்பட்டு மாநகரப் போக்குவரத்துக் கழகத்தால் தற்போது இயக்கப்பட்டு வருகின்றன.

### 3.8 மலைப்பகுதிகளில் சிற்றுந்துகள்

மலைப்பகுதிகளில் குறுகலான பாதைகளினால் போக்குவரத்து வசதியின்றித் தவிக்கும் மக்கள், அருகில் உள்ள நகரங்களுக்குச் சென்று வருவதற்கும், அங்குள்ள மாணவ / மாணவியர் பள்ளி செல்வதற்கும், தொழிலாளர்கள் அருகில் உள்ள நகரங்களுக்கு வேலைக்குச் செல்வதற்கும்,

நோயாளிகள் அருகில் உள்ள மருத்துவமனைக்கு உடனடியாகச் செல்வதற்கு ஏதுவாக, ரூ.35 கோடி செலவில் மலைப்பகுதிகளில் 208 சிற்றுந்துகளை இயக்க இவ்வரசு ஆணையிட்டுள்ளது. இதுவரையில், 79 சிற்றுந்து சேவைகள் அப்பகுதிகளில் இயக்கப்பட்டு வருகின்றன.

**3.9 உணவகம் மற்றும் கழிவறை வசதியுடன் கூடிய பேருந்து**

சென்னையிலிருந்து திருச்சிக்கு, ஸ்ரீரங்கம் வழியாக உணவகம் மற்றும் கழிவறை வசதிகளுடன் கூடிய இரண்டு பேருந்துகள் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தால் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும் 10 பேருந்துகளை விரைவில் இவ்வாண்டில் இயக்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

**3.10 விழாக்காலச் சிறப்புப் பேருந்துகள்**

தீபாவளி, பொங்கல் ஆகிய விழாக்காலங்களின் போது, பொதுமக்கள் மாநிலத்தின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் தங்கள் சொந்த ஊருக்குச் சென்று, பின்பு பணிபுரியும் இடத்திற்குத் திரும்பி வருவதற்கு வசதியாக, போதுமான பேருந்துகளை இயக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த விழாக்காலங்களில் இயக்கப்படும் பேருந்துகளின் மூலம் அனைத்து அரசுப் போக்குவரத்துக் கழகங்களும் குறிப்பிடத்தக்க வருவாய் ஈட்டியுள்ளன. கடந்த ஆறு ஆண்டுகளில் இயக்கப்பட்ட சிறப்புப் பேருந்துகள் மற்றும் அவற்றின் வருவாய் விவரங்கள் பின் வருமாறு:–

| ஆண்டு | பண்டிகை | இயக்கப்பட்ட சிறப்புப் பேருந்துகளின் எண்ணிக்கை | ஈட்டிய மொத்த வருவாய் (ரூ. கோடியில்) |
|---|---|---|---|
| 2012–2013 | தீபாவளி<br>பொங்கல் | 7958<br>7135 | 87.37<br>89.70 |
| 2013–2014 | தீபாவளி<br>பொங்கல் | 10484<br>9546 | 86.93<br>93.41 |
| 2014–2015 | தீபாவளி<br>பொங்கல் | 10499<br>8548 | 83.96<br>81.86 |
| 2015–2016 | தீபாவளி<br>பொங்கல் | 15540<br>7160 | 83.92<br>90.51 |
| 2016–2017 | தீபாவளி<br>பொங்கல் | 15033<br>13337 | 85.75<br>95.05 |
| 2017–2018 | தீபாவளி<br>பொங்கல் | 14113<br>13407 | 89.36<br>75.80 |

### 3.11 தாமாகவே முன்வந்து இரத்ததானம் செய்யும் திட்டம்

தாமாகவே முன்வந்து இரத்ததானம் செய்யும் பணியாளர்களின் பெயர்ப்பட்டியல் மாநகரப் போக்குவரத்துக் கழகத்தினால் பராமரிக்கப்பட்டு வருகின்றது.

**16,888** போக்குவரத்துக் கழகப் பணியாளர்கள் இரத்ததானம் செய்வதற்குத் தங்களின் பெயர்களைப் பதிவுசெய்துள்ளனர்.

**3.12 மாநகரப் போக்குவரத்துக் கழகத்தில் மின்கலம் (Battery) மூலம் இயக்கக்கூடிய பேருந்துகள் அறிமுகம்**

70 மின்சார பேருந்துகளை வாங்கும் ஒரு விரிவான திட்ட அறிக்கை (Detailed Project Report) நடுவண் அரசின் கனரக தொழில்கள் மற்றும் பொதுத்துறை அமைச்சகம், கனரக தொழில்துறை, புதுடெல்லிக்கு அனுப்பப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான ரூபாய் **140** கோடியில், ரூ. **105** கோடியினை நடுவண் அரசும், ரூ.**35** கோடியினை தமிழக அரசும், வழங்கிட உள்ளன. மேலும், உள்கட்டமைப்பிற்காக (Charging infrastrucutre) ரூ.**15** கோடியினை நடுவண் அரசு முழுவதுமாக வழங்க உள்ளது.

**28.03.2018** அன்று C40 நகரங்கள் காலநிலை தலைமைக் குழுவுடன் தமிழக அரசு “தூய்மையான பேருந்து அறிவிப்பில்” கையொப்பமிட்டது. இவ்வறிவிப்பில் அரசு கையொப்பமிட்டதன் மூலம் மாசுபாடற்ற மின்சார பேருந்துகளும், குறைந்த மாசினை வெளிப்படுத்தும் பேருந்துகளும் தமிழ்நாட்டில் அறிமுகப்படுத்தப்படும். இந்தியாவிலேயே, தமிழ்நாடு தான் முதலாவதாக C40

நகரங்கள் காலநிலை தலைமைக் குழுவுடன் இவ்வறிவிப்பில் கையொப்பமிட்டுள்ள மாநிலமாகும். C40 தூய்மையான பேருந்து நிதி நிறுவனம் சார்பில் கியூடோ, எக்குவேடரில் நடைபெற்ற பயிற்சி கருத்தரங்கில் சென்னை மாநகர போக்குவரத்துக் கழகத்தைச் சார்ந்த 2 அதிகாரிகள் கலந்து கொண்டனர் மற்றும் லண்டனில் நடைபெற்ற காற்றின் தரத்தினை மேம்படுத்துவதற்கான பயிற்சி வகுப்பில் மாநகர போக்குவரத்துக் கழகத்தைச் சார்ந்த ஒரு அதிகாரியும் பங்கேற்றார்.

### 3.13 அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தில் படுக்கை வசதியுடன் கூடிய குளிர்சாதனப் பேருந்துகள் அறிமுகம்

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தால் படுக்கை வசதியுடன் கூடிய 40 குளிர்சாதனப் பேருந்துகள் விரைவில் இயக்கப்படும்.

### 3.14 அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் கண்காணிப்பு கேமரா (CCTV) பொருத்துதல்

பயணிகளின், குறிப்பாக பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் படிப்படியாக கண்காணிப்பு கேமரா (CCTV) பொருத்தப்படும்.

அதனடிப்படையில், மாநகரப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் 200 கண்காணிப்பு கேமராக்கள் ரூ.8,40,16,000/– செலவில் நிர்பயா நிதியத்தின் கீழ் பொருத்துவது தொடர்பான கருத்துரு நடுவண் அரசின் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

**3.15 அரசுப் போக்குவரத்துக் கழக பயிற்சி மையங்கள் மூலம் தனியார் பள்ளி மற்றும் கல்லூரிப் பேருந்துகளின் ஓட்டுநர்களுக்கு புத்தாக்கப் பயிற்சி அளித்தல்**

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், விழுப்புரம் மூலம் 288 தனியார் பள்ளி மற்றும் கல்லூரிப் பேருந்துகளின் ஓட்டுநர்களுக்கு புத்தாக்கப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. அதேபோல், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், சேலம் மூலம் 384 தனியார் பள்ளி மற்றும் கல்லூரிப் பேருந்துகளின் ஓட்டுநர்களுக்கு புத்தாக்கப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

## அத்தியாயம்–4

## பயணக் கட்டணச் சலுகை

**4.1 பயணக் கட்டணச் சலுகை பெறும் பயனாளிகளின் வகைகள் பின்வருமாறு:–**

(i) நாடாளுமன்ற / சட்டமன்ற இந்நாள், முன்னாள் உறுப்பினர்கள் மற்றும் மேலவை முன்னாள் உறுப்பினர்கள்.

(ii) அரசால் அங்கீகரிக்கப்பட்ட பத்திரிக்கை நிருபர்கள் / ஊடக நபர்கள்

(iii) மத்திய / மாநில ஓய்வூதியம் பெறும் சுதந்திரப் போராட்ட வீரர்கள் மற்றும் அவர்தம் விதவைகள், வாரிசுதாரர்கள், தமிழறிஞர்கள், மொழிப்போர் தியாகிகள் மற்றும் அவர்களின் வாரிசுதாரர்கள்.

(iv) புற்று நோயாளிகள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் (காதுகேளாதோர், வாய்பேசாதோர், பார்வையற்றோர், மனவளர்ச்சி குன்றியவர்கள் மற்றும் வலிப்பு நோயாளிகள்)

(v) நாடகக் கலைஞர்கள்

(vi) எச்.ஐ.வி. / எய்ட்ஸ் நோயாளிகள்

(vii) மூத்த குடிமக்களுக்கான பேருந்துப் பயண அட்டை **21.02.2016** முதல் குளிர்சாதன பேருந்துகளை தவிர்த்து சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் மட்டும்.

## 4.2 மாணவர்களுக்கான சிறப்புச் சலுகைகள்

பள்ளி செல்லும் குழந்தைகளை ஊக்குவிக்கும் வகையில், பின்வரும் கட்டணமில்லாப் பயணச் சலுகை அனைத்து அரசுப் போக்குவரத்துக் கழகங்களிலும் (அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் தவிர) வழங்கப்பட்டு வருகின்றது. இச்சலுகைக்கானத் தொகையை போக்குவரத்துக் கழகங்களுக்கு அரசால் ஈடுசெய்யப்படுகின்றது.

(i) அரசு அங்கீகாரம் பெற்ற தனியார் உள்ளிட்ட அனைத்துப் பள்ளிகள் 1–ஆம் வகுப்பு முதல் 12–ஆம் வகுப்பு வரை.

(ii) தேசிய குழந்தை மற்றும் தொழிலாளர் திட்ட நலப்பள்ளி.

(iii) அரசு பல்தொழில்நுட்பப் பயிலகங்கள்.

(iv) அரசு தொழிற்பயிற்சிக் கூடங்கள்.

(v) அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள்.

மேற்கண்ட சலுகை 2013–14–ஆம் ஆண்டு முதல் பின்வரும் கல்வி நிறுவனங்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. இச்சலுகைக்கானத் தொகையை போக்குவரத்துக் கழகங்களுக்கு அரசால் ஈடுசெய்யப்படுகின்றது.

1) சமுதாயக் கல்லூரிகள்.

2) அரசு உதவிபெறும் தனியார் தொழிற்பயிற்சிக் கூடங்கள்.

3) இசைக் கல்லூரிகள்.

4) சென்னை மாநகராட்சித் தொழிற்பயிற்சிக் கூடங்கள்.

**4.3 50% பயணக் கட்டணச் சலுகை**

(i) தனியார் கல்லூரிகள்
(ii) தனியார் தொழில்நுட்பப் பயிலகங்கள்
(iii) தனியார் பொறியியல் கல்லூரிகள்
} அரசு அங்கீகாரம் பெற்றவை

(iv) சென்னை, அண்ணா பல்கலைக் கழகப் பொறியியல் கலந்தாய்விற்கு வரும் மாணவ, மாணவியர் மற்றும் உடன் வரும் நபர் ஒருவருக்கு.

**4.4 மாற்று அனுமதிச் சீட்டுகள்**

சென்னை மாநகர் பேருந்துகளில் பயணம் செய்யும் கல்லூரி மாணவ, மாணவியர், தங்கள் இல்லத்திலிருந்து நூலகம் சென்றுவர **60** மாற்று அனுமதிச் சீட்டுகள் வழங்கப்படுகின்றன.

## 4.5 மாணவர்களுக்கு பேருந்து பயணச் சலுகைக்கான செலவினத்தை அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு ஈடுசெய்தல்

பள்ளிகள், கல்லூரிகள், தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் தொழிற்பயிற்சிக் கூடங்களில் பயிலும் மாணவ, மாணவியருக்கு பேருந்துப் பயணக் கட்டணச் சலுகை அட்டைகள் வழங்கியதால் அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு ஏற்பட்ட இழப்பினை ஈடுசெய்யும் வகையில் அரசால் வழங்கப்பட்ட நிதி விவரங்கள் பின்வருமாறு :

**(ரூ.கோடியில்)**

| வ. எண். | ஆண்டு | தொகை |
|---|---|---|
| 1 | 2011–2012 | 438.97 |
| 2 | 2012–2013 | 452.52 |
| 3 | 2013–2014 | 452.96 |
| 4 | 2014–2015 | 448.00 |
| 5 | 2015–2016 | 480.00 |
| 6 | 2016–2017 | 505.35 |
| 7 | 2017–2018 | 541.78 |
| மொத்தம் | | **3319.58** |

நடப்பு நிதியாண்டு **2018–2019** வரவு–செலவுத் திட்டத்தில், மாணவ, மாணவியருக்கான பயணச் சலுகை வழங்கியதற்கான செலவினங்களை ஈடு செய்வதற்கு ரூ.**766.8540** கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்தொகை போக்குவரத்துக் கழகங்களுக்கு அரசால் ஈடுசெய்யப்படுகின்றது.

## 4.6 இணையவழி முன்பதிவு

அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் தொலைதூரப் பயணம் செய்யும் பயணிகளுக்கு உதவும் வகையில் இணையவழி மூலம் பயணச்சீட்டு முன்பதிவு செய்யும் முறை **03.10.2011** முதல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. **2017–2018**–ஆம் ஆண்டில் மொத்த முன்பதிவில் இணையவழி முன்பதிவு **56.29** சதவீதமாக உயர்ந்துள்ளது.

## 4.7 விருப்பம் போல் பயணம் செய்ய மாதாந்திரப் பயணச் சீட்டுகள்

அரசு நகரப் பேருந்துகளில் பயணம் செய்யும் பயணிகளை ஊக்குவிக்கும் வகையில் சென்னை, மதுரை, கோயம்புத்தூர், சேலம், திருச்சி, திருநெல்வேலி, வேலூர், திருப்பூர், ஈரோடு, மற்றும் தூத்துக்குடி ஆகிய

மாநகராட்சிகளில், மாதாந்திரப் பயணச் சீட்டானது, ஒரு சீட்டுக்கு ரூ.1,000/– கட்டண விகிதத்தில் விருப்பம் போல் பயணம் செய்ய பயணச் சீட்டுகள் சில நிபந்தனைகளுடன் வழங்கப்படுகின்றன.

## 4.8 மூன்றில் ஒரு பங்கு கட்டணச் சலுகை

தினந்தோறும் பயணம் செய்யும் பயணிகளின் வசதிக்காக, மாநகர் மற்றும் நகரப் பகுதிகளில் பயன்பாட்டில் இருந்து வரும் மூன்றில் ஒரு பங்கு பயணக் கட்டணச் சலுகையானது, 2013–2014–ஆம் ஆண்டு முதல் புறநகர் பேருந்துகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம் புறநகர் பேருந்துகளில் தினந்தோறும் பயணம் செய்யும் பயணிகளிடத்தில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

## 4.9 குழுப் பயணச் சீட்டு சலுகை

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் 10 அல்லது அதற்கு மேற்பட்ட பயணிகள் குழுவாக முன்பதிவு செய்யும்போது பயணக் கட்டணத்தில் 10 சதவீதம் கட்டணக் கழிவுத் தொகை 2013–14–ஆம் ஆண்டு முதல் வழங்கப்படுகின்றது. இச்சலுகையின் மூலம் 22,216 குழுப் பயணச்சீட்டுகள் இதுவரையில் முன்பதிவு செய்யப்பட்டுள்ளன.

**31.03.2018** அன்றுள்ளவாறு, **2,86,561** பயணிகள் ரூ.**86.79** இலட்சத்திற்கு சலுகை பெற்றுப் பயனடைந்துள்ளார்கள்.

**4.10 மின்னணுப் பயணச்சீட்டு வழங்கும் கருவிகள்**

புவி இருப்பிட முறைமையை (GPS) அடிப்படையாகக் கொண்ட தொழில்நுட்ப மின்னணுப் பயணச்சீட்டு இயந்திரம், பயணிகளுக்கும் நடத்துநர்களுக்கும் உதவியாக உள்ளதோடு, நடத்துநர்கள் பயணச்சீட்டு வழங்குவதற்கும், கணக்கிடுவதற்கும் எளிதாக உள்ளது. மேலும், போக்குவரத்துக் கழகங்கள் தங்களின் இயக்கச் செயல்பாட்டுத் திறனை வளர்த்துக் கொள்ளவும், கணக்கீட்டை உறுதி செய்யவும் பெரிதும் உதவுகின்றது. இத்திட்டத்தின்கீழ், அனைத்து அரசுப் போக்குவரத்துக் கழகங்களிலும் **23,051** மின்னணு பயணச்சீட்டு இயந்திரங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இதற்காக ரூ.**31.66** கோடி அரசால் நிதியுதவியாக வழங்கப்பட்டுள்ளது.

## அத்தியாயம்–5

## வருவாய் மேம்பாட்டு நடவடிக்கைகள்

### 5.1 கழிவு செய்யப்பட்ட பேருந்துகளை மின்னணுத் தொழில்நுட்ப முறையில் ஏலமிடுதல்

அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் உள்ள கழிவு செய்யப்பட்ட பேருந்துகளை மின்னணுத் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி ஏலமிடவும் மற்றும் அதற்கான சிறந்த விலை கிடைக்கும் பொருட்டு மத்திய அரசு நிறுவனமான திருவாளர்கள் எம்.எஸ்.டி.சி (M/s.MSTC) சேவை நிறுவனமாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இதன் பயனாக, கடந்த ஏழு ஆண்டுகளில் **(2011–2018) 5343** பேருந்துகளைக் கழிவு செய்ததில் போக்குவரத்துக் கழகங்கள் ரூ.**70.61** கோடியை வருவாயாக ஈட்டியுள்ளன.

### 5.2 விளம்பரங்கள் மூலம் வருவாய்

போக்குவரத்துக் கழகங்கள் கடந்த ஏழு ஆண்டுகளில், பேருந்துகளில் விளம்பரத்திற்கான பலகைகள் வைக்கப்பட்டு அதன் மூலமாக ரூ.**100.77** கோடியை வருவாயாக ஈட்டியுள்ளன.

**5.3 பயணவழி உணவகங்கள்**

தொலைத்தூர வழித்தடங்களில் பயணிகளுக்கு சிறப்பான வசதி அளிக்கும் பொருட்டு, தமிழகம் முழுவதும் ஒப்பந்தம் செய்யப்பட்ட 26 பயணவழி உணவகங்களில் பேருந்துகளை நிறுத்த கூடுதல் இடவசதி, பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி, நவீன சமையல் கூடம், உணவு அருந்தும் இடம், தரமான உணவு மற்றும் சுகாதாரமான கழிப்பிட வசதி போன்றவை மேம்படுத்தப்பட்டுள்ளன. இதன் மூலம், கடந்த ஏழு ஆண்டுகளில் அனைத்து அரசுப் போக்குவரத்துக் கழகங்களும் ரூ.24.39 கோடி வருவாய் ஈட்டியுள்ளன.

**5.4 சிப்பஞ்சல் மற்றும் விரைவுத் தூதஞ்சல் சேவை**

அரசுப் பேருந்துகளில் சிப்பஞ்சல் (Parcel Services) மற்றும் விரைவுத் தூதஞ்சல் (Courier Services) சேவைகள் மூலமாக கடந்த ஏழு ஆண்டுகளில் அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் ரூ.318.06 இலட்சம் வருவாய் ஈட்டியுள்ளன.

**5.5 அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் சீரமைப்பு மற்றும் சிக்கன நடவடிக்கைகள்**

மூலதனங்களை சிறப்பாக பயன்படுத்துதல், அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் சொத்துக்களை உகந்த வழியில் பயன்படுத்துதல் மற்றும் செலவினங்களை குறைக்கும்

பொருட்டு மாற்று ஏற்பாடுகள் கண்டறிதல் போன்றவற்றின் மூலம் போக்குவரத்துக் கழகங்களின் இயக்கம் மற்றும் நிதி நிலைமையை மேம்படுத்துவதற்காக சீரமைப்பு மற்றும் சிக்கன நடவடிக்கையினை மேற்கொள்ளும் பொருட்டு அரசால் ஒரு குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது. அக்குழுவின் பரிந்துரை அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டு, அதனடிப்படையில் அரசு போக்குவரத்துக் கழகங்களில் செலவு மற்றும் வருவாய் திறன்களை அதிகரிக்கும் நடவடிக்கைகள் படிப்படியாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

## அத்தியாயம்–6

## பணியாளர்களின் நலன்களுக்கான நடவடிக்கைகள்

அனைத்து போக்குவரத்துக் கழகங்களும் மொத்தம் **1,37,408** பணியாளர்களைக் கொண்டுள்ளது. **536** மேலாண்மை அலுவலர்கள், **56,123** ஓட்டுநர்கள், **54,786** நடத்துநர்கள், **17,194** தொழில்நுட்ப பணியாளர்கள், **1,610** போக்குவரத்து மேற்பார்வையாளர்கள், **1833** தொழில்நுட்ப மேற்பார்வையாளர்கள், **756** அலுவலக மேற்பார்வையாளர்கள் மற்றும் **4,570** நிர்வாக மற்றும் இதர பணியாளர்கள் ஆகும். இப்பணியாளர்களின் நலனுக்காக எடுக்கப்பட்ட நல நடவடிக்கைகள் விவரம் பின்வருமாறு:

### 6.1 காலிப் பணியிடங்களை நிரப்புதல்

அனைத்து அரசுப் போக்குவரத்துக் கழகங்களிலும் கீழ்க்கண்டவாறு காலிப் பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன.

| ஆண்டு | சேம ஓட்டுநர் | சேம நடத்துநர் | தொழில் நுட்பம் | கருணை அடிப்படையிலான பணி நியமனம் | மொத்தப் பணி நியமனம் |
|---|---|---|---|---|---|
| 2011–17 | 15,584 | 15,200 | 4,781 | 1,670 | 37,235 |
| 2017–18 | 4 | – | – | 527 | 531 |
| மொத்தம் | **15,588** | **15,200** | **4,781** | **2,197** | **37,766** |

## 6.2 அரசுப் போக்குவரத்துக் கழகப் பணியாளர்களின் பணி வரன்முறை செய்தல்

கடந்த ஏழு ஆண்டுகளில், அரசுப் போக்குவரத்துக் கழகங்களில், தினக்கூலி அடிப்படையில் பணிபுரிந்த ஓட்டுநர், நடத்துநர் மற்றும் தொழில்நுட்பப் பணியாளர்களின் பணியினை வரன்முறை செய்யப்பட்டுள்ள விவரம் பின்வருமாறு :–

| ஓட்டுநர் | நடத்துநர் | தொழில் நுட்பம் | மொத்தம் |
|---|---|---|---|
| 18,757 | 19,287 | 5,003 | 43,047 |

## 6.3 ஊதிய ஒப்பந்தம்

போக்குவரத்துக் கழக தொழிலாளர்களுக்கு, தொழில் தகராறு சட்டம் 1947 பிரிவு 12(3)–ன் கீழ், மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை ஊதிய ஒப்பந்த பேச்சுவார்த்தை நடத்தப்படுகின்றது. 1977–ம் வருடம் முதல் ஊதிய ஒப்பந்தப் பேச்சு வார்த்தை நடைபெற்று வருகின்றது. இதுவரை அரசுப் போக்குவரத்துக் கழக ஊழியர்களுக்கு 12 ஊதிய ஒப்பந்தங்கள் நிறைவேற்றப்பட்டு உள்ளன. இந்நிலையில், கடந்த 04.01.2018 அன்று நடைபெற்ற 13–வது ஊதிய ஒப்பந்தம் தொடர்பாக நிர்வாகம் மற்றும் தொழிற்சங்கங்கள் இடையே நடைபெற்ற

இறுதிப் பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்பட்டதைத் தொடர்ந்து, பெரும்பாண்மையான தொழிற் சங்கங்களுக்கும் நிர்வாகத் தரப்பிற்கும் இடையே ஊதிய ஒப்பந்தம் கையெழுத்தானது. இவ்வொப்பந்தத்தின் அடிப்படையில், போக்குவரத்துக் கழகத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு 2.44 காரணி என்பதை அடிப்படையாகக் கொண்ட ஊதிய உயர்வு வழங்க, நிர்வாகத் தரப்பில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

மேற்கண்ட ஊதிய ஒப்பந்தத்தில் வழங்கப்பட்ட ஊதிய உயர்வை ஏற்றுக் கொள்ளாத சில தொழிற்சங்கங்கள் 2.44 காரணி என்பதற்கு பதிலாக 2.57 காரணியை அடிப்படையாக கொண்ட ஊதிய உயர்வு வழங்கப்பட வேண்டும் என்று கோரி வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். இத்தொழிற்சங்கங்களினால், தொடங்கப்பட்ட வேலை நிறுத்தத்தை எதிர்த்து உயர்நீதி மன்றத்தில் தொடரப்பட்ட பொது நல வழக்கில், போக்குவரத்துக் கழக தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டிய ஊதிய உயர்வினை முடிவு செய்ய, மத்தியஸ்தர் குழுவினை அமைப்பது என்ற மாண்புமிகு உயர்நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில், ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி திரு. E. பத்மநாபன் அவர்களை கொண்ட மத்தியஸ்தர் குழுவினை அமைத்து 01.02.2018

அன்று அரசால் ஆணை வெளியிடப்பட்டது, இம்மத்தியஸ்தர், நிர்வாகம் மற்றும் சம்பந்தப்பட்ட தொழிற்சங்கங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி, **2.44** காரணி என்பதை அடிப்படையாகக் கொண்ட ஊதிய உயர்வு வழங்கியதை உறுதி செய்து, தனது அறிக்கையினை மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் சமர்ப்பித்ததைத் தொடர்ந்து **2.44** காரணி நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அதனடிப்படையில், பணிபுரியும் போக்குவரத்து தொழிலாளர்களுக்கு **01.09.2017** அன்றிலிருந்து நிலுவைத் தொகையான ரூ.**109.4760** கோடியினை அரசாணை (நிலை) எண்.**185**, போக்குவரத்து (ட்டி**1**) துறை, நாள் **07.06.2018** மூலம் தரப்பட்டது. மேற்கண்ட தொகையானது அரசால் **2018–2019** வரவு–செலவு திட்ட கணக்கில் ஏற்கனவே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 6.4 முழு உடற்பரிசோதனை

அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரியும் **45** வயதிற்கு மேற்பட்ட ஓட்டுநர்களுக்கு முழு உடற்பரிசோதனைத் திட்டம் **2012–13**–ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இத்திட்டம், **2013–14**–ஆம் ஆண்டில்

அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரியும் அனைத்துப் பணியாளர்களுக்கும் நீட்டிக்கப்பட்டது.

## 6.5 CT ஸ்கேன் இயந்திரம்

பெருந்துறையில் உள்ள சாலை போக்குவரத்து நிறுவனம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நிறுவப்பட்டுள்ள CT ஸ்கேன் இயந்திரத்தின் மூலம் **19,672** போக்குவரத்துக் கழகப் பணியாளர்கள் பயனடைந்துள்ளனர்.

## 6.6 ஓய்வுபெற்ற பணியாளர்களுக்கு பணப்பயன்கள்

**2011**–ஆம் ஆண்டிலிருந்து போக்குவரத்துக் கழகங்களில் ஓய்வுபெற்ற பணியாளர்களுக்கு வழங்கவேண்டிய ஓய்வு கால பணப்பயன்களான பணிக்கொடை மற்றும் ஈட்டிய விடுப்பு ஒப்படைப்பு ஊதியத்திற்கு ரூ.**2,428.61** கோடியும், ஓய்வுபெற்ற பணியாளர்களுக்கு சேமநல நிதியாக ரூ.**1,268.92** கோடியும் வழங்கப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு:–

(ரூபாய் கோடியில்)

| ஆண்டு | பணிக்கொடை | | விடுப்பு ஒப்படைப்பு ஊதியம் | மொத்தம் | சேமநலநிதி | |
|---|---|---|---|---|---|---|
| | பணியாளர்–களின் எண்ணிக்கை | தொகை ரூ. | | | பணியாளர்–களின் எண்ணிக்கை | தொகை ரூ. |
| 2011–2012 | 1609 | 42.60 | 9.61 | 52.21 | 1995 | 148.27 |
| 2012–2013 | 2292 | 82.10 | 17.17 | 99.27 | 3229 | 61.90 |
| 2013–2014 | 5652 | 194.35 | 14.51 | 208.86 | 4065 | 97.91 |
| 2014–2015 | 1664 | 68.76 | 2.16 | 70.92 | 4490 | 129.59 |
| 2015–2016 | 3108 | 137.00 | 11.31 | 148.31 | 4240 | 135.82 |
| 2016–2017 | 2491 | 182.90 | 61.83 | 244.73 | 3810 | 138.18 |
| 2017–2018 | 27845 | 1211.07 | 393.24 | 1604.31 | 12420 | 557.25 |
| மொத்தம் | **44661** | **1918.78** | **509.83** | **2428.61** | **34249** | **1268.92** |

## 6.7 தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழக ஊழியர்களின் ஓய்வூதிய நிதி பொறுப்பாட்சி

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழக ஊழியர்களின் ஓய்வூதிய நிதி பொறுப்பாட்சி ஓய்வுபெற்ற போக்குவரத்துப் பணியாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தினை நடைமுறைப்படுத்தும் முகமையாகும். போக்குவரத்து பணியாளர்களுக்கு ஓய்வூதியத் திட்டம் அரசால் **01.09.1998**

முதல் நடைமுறைப்படுத்தப்பட்டது. **31.03.2003** அன்றும் அதற்கு முன்பும் பணியில் சேர்ந்த பணியாளர்கள் இத்திட்டத்தின்கீழ் வருவர். தற்போது, இத்திட்டத்தின்கீழ் **1.28** இலட்சம் பணியாளர்கள் உள்ளனர்.

**ஓய்வூதியம் வழங்கல்**

கடந்த ஏழு ஆண்டுகளில், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழக ஊழியர்களின் ஓய்வூதிய நிதி பொறுப்பாட்சி வழங்கிய ஓய்வூதியங்கள் விவரம் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது:-

(ரூபாய் கோடியில்)

| வ. எண். | ஆண்டு | ஓய்வூதியதாரர்களின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட ஓய்வூதியம் |
|---|---|---|---|
| 1. | 2011–12 | 39928 | 274.60 |
| 2. | 2012–13 | 44811 | 382.33 |
| 3. | 2013–14 | 50103 | 525.48 |
| 4. | 2014–15 | 55300 | 596.67 |
| 5. | 2015–16 | 60729 | 800.76 |
| 6. | 2016–17 | 65855 | 865.83 |
| 7. | 2017–18 | 70907 | 963.42 |

**2017–18–**ஆம் ஆண்டில் ஓய்வுபெற்ற பணியாளர்களுக்கு வழங்கவேண்டிய பல்வேறு சட்டரீதியான பணப்பயன்களை வழங்கும் பொருட்டு அரசு கீழ்க்கண்ட நிதியினை (அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் பங்கான ரூ.**190.70** கோடி உட்பட) வழங்கியுள்ளது.

(ரூபாய் கோடியில்)

| **வ. எண்.** | **சட்ட ரீதியான பணப்பயன்கள்** | **தொகை** |
|---|---|---|
| **1.** | சேமநல நிதி | 557.2500 |
| **2.** | பணிக்கொடை | 1211.0700 |
| **3.** | விடுப்பு ஒப்படைப்பு ஊதியம் | 393.2400 |
| **4.** | ஒய்வூதிய ஒப்படைப்பு | 221.1411 |
| **5.** | பங்களிப்பு ஓய்வூதிய திட்டம் | 55.3840 |
| | **மொத்தம்** | **2438.0851** |

## 6.8 நலத்திட்டங்கள்

தொழிலாளர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினரின் சீரிய நலன் கருதி, போக்குவரத்துக் கழகங்கள் கீழ்க்கண்ட நலத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றன:–

1. பணிக்காலஅடிப்படையிலான சிறப்புச் சம்பளஉயர்வு / ஆய்வுப் பலன்கள்.

2. விடுப்புப் பலன்கள்

3. திருப்பான் படி ( **Steering Allowance** )

4. கல்வி உதவித்தொகை.

5. சலுகைக் கட்டண சிற்றுண்டி வசதி.

6. இலவசச் சீருடைகள் மற்றும் சலவைப்படி.

7. திருமணக் கடன்.

8. வழக்குக் கட்டணம் ஈடு செய்தல்.

9. இறுதிச் சடங்குச் செலவுகள்.

10. மாணவர்களுக்கு பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கு சென்றுவரக் கட்டணமில்லா பயண அனுமதிச்சீட்டு மற்றும் குடும்ப உறுப்பினர்களுக்கு ஒரு ஆண்டிற்கு 5,500 கி.மீட்டர்.

11. குடும்பநல நிதி.

12. கொடைக்கானல், குற்றாலம் மற்றும் கன்னியாகுமரியில் விடுமுறை விடுதிகள்.

13. புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் (தமிழ்நாடு அரசு ஊழியர்கள் பயன்படுத்துவதுபோல).

14. பண்டிகை முன்பணம் ரூபாய் 5000/–.

15. கடந்த ஏழு ஆண்டுகளில்;

    (அ) ஓட்டுநர்கள் மற்றும் நடத்துநர்கள் தங்கி ஓய்வெடுக்க, தரமான அடிப்படை வசதிகளுடன் கூடிய ஓய்வறைகள்

ரூ.5.89 கோடி செலவில் தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

(ஆ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் உள்ள பணிமனைகளில் கான்கீரிட் தளம், பேருந்துகளின் பழுதுநீக்கம் மற்றும் பராமரிப்புக் கூடம் ஆகியவை ரூ.32.27 கோடி செலவில் மேம்படுத்தப்பட்டுள்ளன.

## அத்தியாயம்–7

## ஓட்டுநர்களின் செயல்திறனை மேம்படுத்துதல்

### 7.1 விபத்து நிகழ்வுகளைக் குறைத்தல்

ஓட்டுநர்களின் திறனை மேம்படுத்தும் பொருட்டு நவீனமுறைக் கற்பித்தல் மற்றும் பயிற்சி வசதிகளுடன் கூடிய மேம்பட்ட ஒரு கனரக வாகன ஓட்டுநர் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையம், கும்மிடிப்பூண்டியிலுள்ள சாலைப் போக்குவரத்து நிறுவன வளாகத்தில் ரூ.15 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

### 7.2 ஓட்டுநர்களுக்குப் புத்தாக்கப் பயிற்சி

ஓட்டுநர் மன அழுத்தத்தை குறைக்கவும் விபத்தில்லா பயணம் மற்றும் ஓட்டுநர்களின் உடல் ஆரோக்கியம் மேம்படவும் புத்தாக்கப் பயிற்சி மையங்களில் ஓட்டுநர்களுக்குத் தொடர்ந்து பயிற்சி அளிக்கப்படுகிறது.

### 7.3 ஓட்டுதல் ஒத்த தன்மைக் கருவி

தொழில்நுட்பத்துடன் கூடிய ஓட்டுதல் ஒத்த தன்மைக் கருவி மூலம் சென்னை, திருச்சி, பொள்ளாச்சி மற்றும் மதுரை ஆகிய இடங்களில் ஓட்டுநர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.

### 7.4 ஓட்டுநர் பயிற்சி பள்ளிகள்

தமிழ்நாட்டில் **16** ஓட்டுநர் பயிற்சி பள்ளிகள் மூலம் ஓட்டுநர்களுக்கு 7 இடங்களில் பயிற்சி அளிக்கப்படுகின்றன.

## அத்தியாயம்–8

## அரசுப் போக்குவரத்துக் கழகங்கள்

### 8.1 மாநகர் போக்குவரத்துக் கழகம் (சென்னை) லிமிடெட், சென்னை

இப்போக்குவரத்துக் கழகத்தின் தலைமையகம் பல்லவன் சாலையில் உள்ள பல்லவன் இல்லத்தில் அமைந்துள்ளது. மாநகர் போக்குவரத்துக் கழகம், சென்னை நகரில் அதிகமாக பேருந்துகளை இயக்கும் நிறுவனமாகும். சென்னை மற்றும் அதனை ஒட்டியுள்ள காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களிலும் நகரப் பேருந்துகளை இயக்குகிறது.

- இப்போக்குவரத்துக் கழகம் 34 பணிமனைகளையும், 3,740 பேருந்துகளைக் கொண்டு 3,439 வரையறுக்கப்பட்ட சேவைகளை 708 வழித்தடங்களில் ஒவ்வொரு நாளும் இயக்கி வருகின்றது. இதன் மொத்த பணியாளர்களின் எண்ணிக்கை 23,688 ஆகும். இக்கழகம் சாதாரண பேருந்து, விரைவுப் பேருந்து, சொகுசுப் பேருந்து, தொடர் பேருந்து, வால்வோ மற்றும் குளிர்சாதனப் பேருந்துகளை இயக்கி

வருகின்றது. இக்கழகத்தின் இரண்டு பேருந்து கூண்டு கட்டும் பிரிவு குரோம்பேட்டையில் அமைந்துள்ளது.

- பேருந்துகளின் எண்ணிக்கையைப் பொறுத்து பணிமனைகளை உயர்த்திட அரசு ஆணையிட்டுள்ளது. அதன்படி பாடியநல்லூர், வேளச்சேரி, கண்ணகி நகர், மகாகவி பாரதி நகர், பெசன்ட் நகர், திருவேற்காடு, ஆதம்பாக்கம், குரோம்பேட்டை–2, பெரம்பூர்–2, குன்றத்தூர், பெரும்பாக்கம், தையூர், கும்மிடிப்பூண்டி மற்றும் தாமரைப்பாக்கம் ஆகிய இடங்களில் புதிய பணிமனைகளை திறக்க அறிவிப்பு வெளியிடப்பட்டது. இவற்றுள் ஆதம்பாக்கம் மற்றும் பெசன்ட் நகர் ஆகிய பணிமனைகள் **19.02.2014** அன்று திறக்கப்பட்டது. பாடியநல்லூர், மகாகவி பாரதி நகர், குரோம்பேட்டை–2, குன்றத்தூர், செம்மஞ்சேரி ஆகிய ஐந்து புதிய பணிமனைகள் **12.10.2015** அன்று திறக்கப்பட்டது. கண்ணகிநகர் பணிமனை **04.03.2017** அன்றும் பெரும்பாக்கம் பணிமனை **04.07.2017** அன்றும் திறந்துவைக்கப்பட்டன. பெரம்பூர்–2 பணிமனை பணிகள் முடிவடையும் நிலையிலும் மற்றும் மீதமுள்ள ஐந்து இடங்களுக்கு தேவையான நிலத்தை

கண்டறிந்து நில ஒதுக்கீடு உரிமை பெற விரைவான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

- போக்குவரத்துத் துறையின் **2011–12–**ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை அறிவிப்பின்படி, **26.06.2014** அன்று குரோம்பேட்டையில் கூடுதல் பேருந்து கூண்டு கட்டும் பிரிவு திறக்கப்பட்டது.
- போக்குவரத்துத் துறையின் **2014–15–**ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை அறிவிப்பின்படி, தகுதிச் சான்று பிரிவுகள் **12.10.2015** அன்று தண்டையார்பேட்டையிலும், **04.03.2017** அன்று அயனாவரத்திலும் துவக்கி வைக்கப்பட்டன.
- சிற்றுந்துகள் அறிமுகப்படுத்தப்பட்டு, பேருந்து வசதி இல்லாத உட்புற பகுதிகளை அருகில் உள்ள முக்கிய சாலைகளுடன் இணைத்து சென்னை மக்களின் தேவையை பூர்த்தி செய்ய உதவுகின்றது.
- அனைத்து பணிமனைகளிலும் உள்ள பேருந்துகளில் விரைவாக பயணச் சீட்டு வழங்குவதற்காக புவி இருப்பிட முறைமையை (GPS) அடிப்படையாகக் கொண்ட தொழில்நுட்ப மின்னணுப் பயணச்சீட்டு

கருவிகள் நடத்துநர்களால் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

- சென்னை மெட்ரோ ரயில் மற்றும் மாநகர் போக்குவரத்துக் கழகம் இரண்டிலும் பயணம் செய்ய கூடிய வகையில் பொதுவான பயண அட்டை (ஸ்மார்ட் கார்டு) வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேலும், இத்திட்டம் மாநிலத்தில் உள்ள அனைத்து போக்குவரத்துக் கழகத்திற்கும் விரிவுபடுத்தப்பட உள்ளது.

**பயணிகளுக்காக இக்கழகம் வழங்கும் கூடுதல் வசதிகள்**

- **66** இரவு நேரப் பேருந்துகள் தினமும் இயக்கப்பட்டு வருகின்றன. அவற்றுள் 15B, 27B, 95, 77, 70C மற்றும் இதர வழித்தடங்களில் இயக்கப்படுகின்றன.
- தினமும் மகளிர் மற்றும் சிறுவர்களுக்காக **253** சிறப்புப் பேருந்துகள் **93** வழித்தடங்களில் சென்னை நகர் முழுவதும் இயக்கப்பட்டு வருகின்றன.
- பேருந்துகளில் பயணம் செய்ய வரும் பாலூட்டும் தாய்மார்களுக்காக தனி அறை வசதி **27** பேருந்து நிலையங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

- **60** வயதிற்கு மேற்பட்ட மூத்த குடிமக்கள் பேருந்துகளில் பயணம் செய்ய பயண அட்டைகள் வழங்கும் திட்டம் **24.02.2016** அன்று துவக்கப்பட்டது. சராசரியாக ஒரு நாளைக்கு **48,240** மூத்த குடிமக்கள் பயணம் செய்கின்றனர்.

## 8.2 அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் தமிழ்நாடு லிமிடெட், சென்னை

இப்போக்குவரத்துக் கழகத்தின் தலைமை அலுவலகம் சென்னையில் உள்ள பல்லவன் சாலையில் அமைந்துள்ளது. இக்கழகம் மாவட்டங்களுக்கு இடையேயும், மாநிலங்களுக்கு இடையேயும், பேருந்துகளை இயக்குகின்றது. மேலும், கேரளா, கர்நாடகா மற்றும் ஆந்திரா ஆகிய மாநிலங்களுக்கும் மற்றும் புதுச்சேரிக்கும் தன்னுடைய இயக்க எல்லையை விரிவுபடுத்தியுள்ளது.

- இக்கழகத்தால் **1,157** பேருந்துகள், **22** பணிமனைகள் மூலம் இயக்கப்படுகின்றன. அவற்றில் அதிநவீன மிதவை பேருந்து, குளிர்சாதன பேருந்து மற்றும் உணவக மற்றும் கழிப்பறை வசதியுடன் கூடிய பேருந்துகளும் அடங்கும்.

- ஆந்திரம், கர்நாடகா, கேரளா மற்றும் புதுச்சேரி ஆகிய அண்டை மாநிலங்களுக்கு அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் 251 வழித்தடங்களில் இயக்கி வருகின்றது. அதில் அண்டை மாநிலங்களுக்கு 111 வழித்தடங்களும் தமிழ்நாட்டின் உள்பகுதிகளுக்கு 140 வழித்தடங்களும் இயக்கப்படுகின்றன.

- இந்நிறுவனத்தில் மொத்தம் 5,963 தொழிலாளர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர். அவர்களில் ஓட்டுநர், நடத்துனர், ஓட்டுநருடன் கூடிய நடத்துனர், தொழில்நுட்ப பணியாளர், போக்குவரத்து மற்றும் தொழில்நுட்ப மேற்பார்வையாளர்கள், அலுவலகப் பணியாளர்கள், பதிலி பணியாளர்கள், அம்மா குடிநீர் விநியோக பணியாளர்கள் மற்றும் பிற தொழிலாளர்கள் ஆகியோர் அடங்குவர்.

- இக்கழகத்தில் 03.10.2011 தேதி முதல் இந்திய ரயில்வே துறை மற்றும் விமான துறை ஆகியவைகளை போலவே இணைய தளம் (e-Ticketing) மற்றும் செல்லிடப் பேசி

மூலமாக முன்பதிவு செய்யும் வசதி பயணிகளுக்கு செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு மற்றும் அண்டை மாநிலங்களான கேரளா, ஆந்திரா, புதுச்சேரி மற்றும் கர்நாடகாவில் **76** இடங்களில் **82** இணைய வழி முன்பதிவு மையங்கள் செயல்படுகின்றன.

- தமிழ்நாட்டில் முதன் முறையாக, அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தால் உணவகம் மற்றும் கழிப்பறை வசதியுடன் சென்னையிலிருந்து ஸ்ரீரங்கத்திற்கு பெண்கள், வயதானோர் மற்றும் நீரிழிவு நோயாளிகள் பயன்பெறும் வகையில் "கிளாசிக்" பேருந்து **20.06.2013** அன்று அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளது.

- அரசு விரைவுப்போக்குவரத்துக் கழகத்தால் திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டியில் உள்ள சாலை போக்குவரத்து நிறுவனத்தில் **2.47** ஏக்கர் நிலப்பரப்பில் அம்மா குடிநீர் உற்பத்தி நிலையம் துவங்கப்பட்டு குடிநீர் உற்பத்தி செய்யப்பட்டு குடிநீர் பாட்டில்கள் **234** சட்டமன்ற தொகுதிகளுக்குட்பட்ட

இடங்களில் 306 விற்பனை நிலையங்களின் மூலமாக ஒரு லிட்டர் பாட்டில் ரூபாய் 10/-க்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

- தலைமை அலுவலகம், பேருந்து நிலையம் போன்ற முக்கிய இடங்களை கண்காணிக்கவும் பயணிகள் போக்குவரத்தை கண்காணிக்கவும் ஆங்காங்கே கண்காணிப்பு கேமராக்கள் (CCTV) பொருத்தப்பட்டுள்ளன.

- முக்கிய இடங்களுக்கு BRANDED பெயர்களுடன் 50 "பிரீமியம் சர்வீஸ்கள்" (PREMIUM SERVICES) இயக்கப்படுகின்றன.

- முன்பதிவு செய்த பயணிகளின் நன்மைக்காக, கோயம்புத்தூர், திருநெல்வேலி, நாகர்கோவில் போன்ற நகரங்களில் முக்கியமான 13 இடங்களில் பயணிகளை ஏற்றிக்கொள்ள "PICK UP POINTS" அதிகரிக்கப்பட்டுள்ளன.

- இப்போக்குவரத்துக் கழகத்தால் இயக்கப்படும் ஒருவழித் தடத்தில், முன்பதிவு மையங்கள் இல்லாத

இடத்தில் முன்பதிவு செய்யும் பயணிகள் வசதிக்காக தற்போது இணையதளம் மூலமாக எதிர்முனையிலும் இருக்கைகள் முன்பதிவு செய்யும் வசதி செய்யப்பட்டுள்ளது.

- பொது மக்கள் எளிதாக பயணம் செய்யும் வகையில் 2017 தீபாவளி திருநாளின் போதும் 2018 பொங்கல் பண்டிகையின் போதும் சிறப்பு பேருந்துகள் இயக்கம் பரவலான இடங்களிலிருந்து இயக்கப்பட்டன.

- தஞ்சாவூர் மற்றும் கோயம்புத்தூரில் உள்ள அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகப்பேருந்து நிலையங்களில் பயணம் செய்ய வரும் தாய்மார்களுக்கு பாலூட்டும் அறைகள் அமைக்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளன.

## 8.3 தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) லிமிடெட், விழுப்புரம்

இப்போக்குவரத்துக் கழகம், விழுப்புரம் நகரை தலைமை இடமாகக் கொண்டு இயங்கி வருகின்றது. பேருந்து இயக்கங்களை கண்காணிக்கும் பொருட்டு, விழுப்புரம்,

கடலூர், திருவண்ணாமலை, வேலூர், காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் ஆகிய இடங்களில் மண்டல அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. இப்போக்குவரத்துக் கழகம், நகர, புறநகர மற்றும் மலைப்பகுதிகளுக்கு பேருந்து சேவைகள் வழங்கி வருகின்றது.

- இக்கழகத்தின் பணிமனைகளின் எண்ணிக்கை 61 ஆகும். இக்கழகத்தின் மொத்த பேருந்துகளின் எண்ணிக்கை 3,502 மற்றும் வரையறுக்கப்பட்ட சேவைகளின் எண்ணிக்கை 3,166 ஆகும். இக்கழகத்தின் பணியாளர்களின் எண்ணிக்கை 23,361. இக்கழகம், சாதாரண, விரைவு மற்றும் சொகுசு போன்ற பல்வேறு வகையான பேருந்துகளை இயக்கி வருகின்றது.
- இப்போக்குவரத்துக் கழகம் மூன்று புதுப்பித்தல் பிரிவுகள், மூன்று டயர் புதுப்பித்தல் பிரிவுகள், மூன்று பேருந்து கூண்டு கட்டும் பிரிவுகள், பத்து தகுதிச்சான்று பிரிவுகள், ஆறு ஓட்டுநர் பயிற்சி பள்ளி, மூன்று கழிவு /ஏலப்பிரிவுகள் மற்றும் ஐந்து பயிற்சி மையங்கள் கொண்டு இயங்கி வருகின்றது.

- நெய்வேலி, ஓரிக்கை–1, ஓரிக்கை–2, சேத்துபட்டு, சின்னசேலம், போ்ணாம்பட்டு, சோளிங்கர், திருக்கழுக்குன்றம், செங்கம், காட்டுமன்னார்கோவில் மற்றும் எலத்தூர் ஆகிய இடங்களில் **11** பணிமனைகள் அமைக்க அரசு அறிவித்துள்ளது. இவற்றில் நெய்வேலி மற்றும் ஓரிக்கை–1 ஆகிய பணிமனைகள் **19.02.2014** அன்றும், சேத்துப்பட்டு பணிமனை **18.06.2015** அன்றும், காட்டுமன்னார்கோயில், சின்னசேலம் மற்றும் பேர்ணாம்பட்டு ஆகிய பணிமனைகள் **12.10.2015** அன்றும், ஓரிக்கை–2 மற்றும் சோளிங்கர் ஆகிய பணிமனைகள் **01.03.2016** அன்றும் தொடங்கி வைக்கப்பட்டன. மேலும் செங்கம் பணிமனை **04.03.2017** அன்று தொடங்கி வைக்கப்பட்டது. எலத்தூர் பணிமனை அமைப்பதற்கான கட்டுமானப் பணிகள் 80% நிறைவு பெற்றுள்ளன. திருக்கழுக்குன்றத்தில் பணிமனை அமைக்க ரூ.**1.42** கோடியில் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது.

- எரிபொருள் மற்றும் மசகு எண்ணெய் சில்லறை விற்பனை நிலையம் அமைப்பதற்காக **8** இடங்கள் கண்டறியப்பட்டு அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- பணிமனைகளில் ATM நிறுவுவதற்கு தகுந்த இடங்கள் தேர்வு செய்யப்பட்டு அதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- 157 எண்ணிக்கையிலான மோட்டார் வாகன விபத்து வழக்குகளுக்கு இழப்பீடாக ரூ.524.95 இலட்சங்கள் மக்கள் நீதிமன்றம் (Lok Adalat) மூலம் வழங்கப்பட்டு முடித்து வைக்கப்பட்டுள்ளன. இந்த நடவடிக்கைக்கு சென்னை உயர்நீதிமன்றம் தமது பாராட்டுதல்களை தெரிவித்துள்ளது.

- **தனியார் ஓட்டுநருக்கான புத்தாக்க பயிற்சி**

  அரசுப் போக்குவரத்துக் கழக ஓட்டுநர்களுக்கு பயிற்சி மையம் மூலம் புத்தாக்க பயிற்சி அளிப்பதை போன்று உயிர்ச்சேத விபத்து ஏற்படுத்திய தனியார் ஓட்டுநர்களுக்கும் உரிமம் புதுப்பிக்க வேண்டிய ஓட்டுநர்களுக்கும் புத்தாக்க பயிற்சி அளிக்கப்பட்டு உள்ளது. அதன் விவரம் பின்வருமாறு:-

  1. 288 எண்ணிக்கையிலான தனியார் கனரக வாகன ஓட்டுநர்களுக்கு ஒரு நாள் புத்தாக்க பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

2. **394** எண்ணிக்கையிலான தனியார் கனரக வாகன ஓட்டுநர்களுக்கு இரண்டு நாட்கள் புத்தாக்க பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

➢ **சிறப்புப் பேருந்துகள் இயக்கம்**

இயக்க பகுதிகளுக்குட்பட்ட அனைத்து பேருந்து நிலையங்களிலிருந்தும் பொதுமக்கள் மற்றும் பக்தர்கள் வசதிக்காக, பிரதி அமாவாசை (மேல்மலையனூர்) மற்றும் பௌர்ணமி (திருவண்ணாமலை) ஆடிக்கிருத்திகை (திருத்தணி), தைபூசம் (வடலூர்), கூவாகம், சித்திராபௌர்ணமி, கார்த்திகை தீபம், பொங்கல் மற்றும் தீபாவளி ஆகிய திருவிழா மற்றும் விஷேச நாட்களில் சிறப்புப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. **2017–18**–ஆம் ஆண்டில், **5,062** நடைகளை கொண்டு **73.08** இலட்சம் கி.மீ இயக்கி ரூ.**1,701.21** இலட்சங்கள் (கி.மீ **1**–க்கு ரூ.**23.28**) இக்கழகத்தால் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

- **மலை வழித்தடம்**

போக்குவரத்துக் கழகம் மூலமாக **29** மலை வழித்தடங்கள் மலைவாழ் மக்களின் நலனுக்காக இயக்கப்பட்டு வருகின்றன. விழுப்புரம் மண்டலத்தில் பத்து பேருந்துகள் கல்வராயன், சேராப்பட்டு மற்றும் வெள்ளிமலை போன்ற மலைப் பகுதிகளுக்கு இயக்கப்படுகின்றன. திருவண்ணாமலை மண்டலத்தில் மூன்று பேருந்துகள் ஜமுனாமரத்தூர் மலைப்பகுதிக்கு இயக்கப்படுகின்றன. வேலூர் மண்டலத்தில் பதினாறு பேருந்துகள் புதூர்நாடு, ஏலகிரி, வெலத்திகாமணிபென்டா, அரவட்லா, ஜமுனாமரத்தூர், பாலமதி, செங்காநத்தம் மலைப்பகுதிகளுக்கு இயக்கப்படுகின்றன.

## 8.4 தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (சேலம்) லிமிடெட், சேலம்

இப்போக்குவரத்துக் கழகம், சேலத்தை தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வருகின்றது. இக்கழகம், சேலம் மற்றும் தருமபுரி ஆகிய இரண்டு மண்டல அலுவலகங்களிலிருந்து நகர, புறநகர மற்றும் மலைப்பகுதி

பேருந்துகளை இயக்கி வருகின்றது. மேலும், இக்கழகம் சாதாரண, விரைவு மற்றும் அதிசொகுசு போன்ற பல்வேறு வகையான பேருந்துகளை இயக்கி வருகின்றது.

- இக்கழகத்தின் பணிமனைகளின் எண்ணிக்கை 32 ஆகும். இக்கழகத்தின் மொத்த பேருந்துகளின் எண்ணிக்கை 2,222 மற்றும் வரையறுக்கப்பட்ட சேவைகளின் எண்ணிக்கை 1,899 ஆகும்.

- இப்போக்குவரத்துக் கழகத்தில் பணியாளர்களின் எண்ணிக்கை 13,819 ஆகும்.

- இப்போக்குவரத்துக் கழகத்தின் நாமக்கல் மற்றும் தருமபுரி ஆகிய இடங்களில் உள்ள பேருந்து கூண்டு கட்டும் பிரிவுகள் ஒவ்வொன்றிலும் மாதத்திற்கு சராசரியாக பத்து பேருந்துகள் கூண்டு கட்டும் கொள்ளளவை கொண்டு செயல்பட்டு வருகின்றன.

- 2017–18–ல் 32 புதிய பேருந்துகள் பொதுமக்களின் வசதிக்காக இயக்கப்பட்டுள்ளன.

- இப்போக்குவரத்துக் கழகம் 2017–18–ல் சிப்பஞ்சல் சேவை மூலமாக ரூ.23.40 இலட்சம் கூடுதல் வருவாய் ஈட்டியுள்ளது.

- இப்போக்குவரத்துக் கழகம் வழித்தடங்களில் உள்ள சுகாதாரமான உணவகங்களில் பயணிகளின்

வசதிக்காக பேருந்துகளை நிறுத்தியதன் மூலம் கூடுதல் வருவாயாக 2016–17ஆம் ஆண்டில் ரூ.49.95 இலட்சம் மற்றும் 2017–18–ல் ரூ.39.23 இலட்சம் ஈட்டியுள்ளது.

- இப்போக்குவரத்துக் கழகம் பேருந்துகளில் வணிக விளம்பரங்கள் மூலமாக கூடுதல் வருவாயாக 2016–17ஆம் ஆண்டில் ரூ.123.57 இலட்சம் மற்றும் 2017–18–ல் ரூ.119.82 இலட்சம் ஈட்டியுள்ளது.

- பயணிகளுக்கு 3–ல் 1 பங்கு பயண கட்டணச் சலுகை வழங்கியதன்பொருட்டு 2016–17–ஆம் ஆண்டில் புறநகர் பேருந்துகளில் 25,089 பயணிகளுக்கும், நகர் பேருந்துகளில் 51,297 பயணிகளுக்கும் பயன் அளித்துள்ளது. 2017–18–ஆம் ஆண்டில் புறநகர் பேருந்துகளில் 21,656 பயணிகளுக்கும், நகர் பேருந்துகளில் 50,991 பயணிகளுக்கும் பயன் அளித்துள்ளது.

- இப்போக்குவரத்துக் கழக இயக்கப் பகுதிகளில் முக்கிய பேருந்து நிலையங்களில் உள்ள 38 மையங்களில் “அம்மா குடிநீர்” குறைந்தபட்ச கட்டணத்தில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

- இப்போக்குவரத்துக் கழகம் ஏற்கனவே இயக்கப்பட்டு வரும் பேருந்துகளை கொண்டு தட நீட்டிப்பின் மூலமாக 2016–17–ஆம் ஆண்டில் 34 கிராமங்களுக்கு

பேருந்து வசதி அளித்து **10,761** மக்களுக்கு பயண வசதி ஏற்படுத்தப்பட்டும், **2017–18**ஆம் ஆண்டில் **8** கிராமங்களுக்கு பேருந்து வசதி அளித்து **3,300** மக்களுக்கு பயண வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

- இப்போக்குவரத்துக் கழகம் பயணிகளின் வசதிக்காக கீழ்க்கண்ட சுற்றுலா தலங்களுக்கும், வழிபாட்டுத் தலங்களுக்கும் கூடுதல் பேருந்து வசதிகளை செய்து வருகின்றது.

1. வார இறுதி நாட்கள் மற்றும் முக்கிய விஷேச நாட்களில் ஏற்காடுமலை, கொல்லிமலை, ஒகேனக்கல் நீர்வீழ்ச்சி மற்றும் மேட்டூர் அணை போன்ற சுற்றுலா தலங்களுக்கு சிறப்புப் பேருந்துகளை இயக்கி வருகின்றது.

2. பண்டிகை மற்றும் விஷேச நாட்களில் ஆலயங்களுக்கு சிறப்புப் பேருந்து வசதி ஏற்படுத்தி வருகின்றது. மாதேஸ்வரன் மலை, தாரமங்கலம், திருச்செங்கோடு, பேளூர் மற்றும் ஆறகலூர் பகுதிகளில் உள்ள ஈஸ்வரன் கோயில்களுக்கும், காளிப்பட்டி மற்றும் கபிலர்மலை பகுதிகளில் உள்ள முருகன் கோயில்களுக்கும், நாமக்கல் ஆஞ்சநேயர் கோவில் ஆகிய வழிப்பாட்டுத் தலங்களுக்கு சிறப்புப் பேருந்துகளை இயக்கி வருகின்றது.

- நடுவண் அரசின் சாலைப் போக்குவரத்து மற்றும் தேசிய நெடுஞ்சாலை அமைச்சகம், நாமக்கல் மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்களில் பயிற்சி நிலையம் அமைப்பதற்கும், சேலம் மற்றும் தருமபுரி மாவட்டங்களில் பயிற்சி நிலையத்தை மேம்படுத்துவதற்கும், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், சேலம் கோட்டத்தின் மூலமாக செயல்படுத்திட நான்கு பயிற்சி நிலையங்களுக்கும் தலா ரூ.1.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இப்பணிகள் 2018–19–ஆம் ஆண்டில் முடித்திட திட்டமிடப்பட்டுள்ளது.

- இப்போக்குவரத்துக் கழகம் ஏற்காடு, கொல்லிமலை, கல்வராயன்மலை மற்றும் நல்லமதி (பச்சைமலை) உள்ளிட்ட மலை பகுதிகளுக்கு பேருந்து சேவையினை அப்பகுதிகளில் உள்ள மக்களுக்காக வழங்கி வருகின்றது.

## 8.5 தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (கோயம்புத்தூர்) லிமிடெட், கோயம்புத்தூர்

இப்போக்குவரத்துக் கழகம், கோயம்புத்தூரைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வருகின்றது.

இக்கழகம், கோயம்புத்தூர் மாவட்டம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள முக்கிய மாவட்டங்களான நீலகிரி, ஈரோடு, சேலம், வால்பாறை மலைப்பகுதி மற்றும் அருகிலுள்ள கேரளா, கர்நாடகா மாநிலங்களுக்கு பேருந்துகளை இயக்கி வருகின்றது. இப்போக்குவரத்துக் கழகம் நகர, புறநகர மற்றும் மலைப்பகுதிப் பேருந்துகளை இயக்கி வருகின்றது. 31.03.2018 அன்றுள்ளவாறு இக்கழகத்தின் பேருந்துகளின் எண்ணிக்கை 3,118 மற்றும் மொத்த பணியாளர்களின் எண்ணிக்கை 19,649.

- இப்போக்குவரத்துக் கழகம் 45 பணிமனைகள், ஆறு கோட்ட அலுவலகங்கள் மற்றும் கோயம்புத்தூர், ஈரோடு, திருப்பூர் மற்றும் ஊட்டி ஆகிய இடங்களில் 4 மண்டல அலுவலகங்களை உள்ளடக்கியதாகும். இக்கழகத்தில், வர்ணம்பூசுதல் பிரிவுகள், டயர் புதுப்பித்தல் பிரிவுகள், பாகங்கள் புதுப்பிக்கும் பிரிவுகள், தகுதிச் சான்றிதழ் புதுப்பிக்கும் பிரிவுகள் மற்றும் கூண்டு கட்டுமானப் பிரிவுகள் உள்ளன.

- இக்கழகத்தில் பணி புரியும் நடத்துநர், ஓட்டுநர், பணிமனைத் தொழிலாளர்கள், மேற்பார்வையாளர்கள் மற்றும் கண்காணிப்பாளர்களுக்கு தேவையான பயிற்சி அளித்து வேலைத் திறனை மேம்படுத்தும்

நோக்கத்துடன் **1978–இல்** பொள்ளாச்சியில் பயிற்சி நிலையம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. மேலும் பவானி சாகரிலும் பயிற்சி நிலையம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

**ஓட்டுதல் ஒத்த தன்மைக் கருவிக் கூடம்**

பொள்ளாச்சி பயிற்சி நிலைய வளாகத்தில் புதிதாக நியமிக்கப்பட்ட ஓட்டுநர்களுக்கும், பணியிலுள்ள ஓட்டுநர்களுக்கும் தங்களது பேருந்து ஓட்டும் திறனை மேம்படுத்திக்கொள்ள ஓர் ஓட்டுதல் ஒத்த தன்மைக் கருவிக் கூடம் நிறுவப்பட்டுள்ளது. இதுவரை **6,428** ஓட்டுநர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

இப்போக்குவரத்துக் கழகம் பயணிகள் போக்குவரத்துடன் பொது மக்களுக்கு பின்வரும் சேவைகளையும் செய்து வருகின்றது.

1. இக்கழகம் வால்பாறை, மருதமலை, ஊட்டி மற்றும் கூடலூரில் பேருந்து நிலையம் கட்டி பராமரித்து வருகின்றது.
2. பயணிகளின் வசதிக்காக இக்கழகம் பர்லியார் மற்றும் ஆசனூரில் சாலையோர சிற்றுண்டி விடுதிகளுடன் ஒப்பந்தம் செய்துள்ளது.

## 8.6 தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிமிடெட், கும்பகோணம்

இப்போக்குவரத்துக் கழகம், கும்பகோணத்தை தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வருகின்றது. இப்போக்குவரத்துக் கழகத்தின் போக்குவரத்துச் சேவையைக் கண்காணிக்க கும்பகோணம், திருச்சி, காரைக்குடி, புதுக்கோட்டை, நாகப்பட்டினம் மற்றும் கரூர் ஆகிய இடங்களில் மண்டல அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. இப்போக்குவரத்துக் கழகம் நகர மற்றும் புறநகரப் பேருந்துகளை இயக்கி வருகின்றது. இப்போக்குவரத்துக் கழகத்தின் மொத்த பணிமனைகளின் எண்ணிக்கை **60** ஆகும்.

இப்போக்குவரத்துக் கழகத்தின் பேருந்துகளின் எண்ணிக்கை **3,689** மேலும், **3,335** வரையறுக்கப்பட்ட சேவைகளை வழங்கி வருகின்றது. இப்போக்குவரத்துக் கழகத்தில் நாளொன்றுக்கு சராசரியாக **27.89** இலட்சம் பயணிகள் பயணிக்கின்றனர். மொத்த பணியாளர்களின் எண்ணிக்கை **23,585** ஆகும். இக்கழகம் சாதாரண, விரைவு மற்றும் அதிசொகுசு பேருந்துகளை இயக்கி வருகின்றது.

இப்போக்குவரத்துக் கழகத்தின் கூண்டுகட்டும் பிரிவுகள் பொறையார், கரூர் (மண்மங்கலம்), காரைக்குடி மற்றும் புதுக்கோட்டை ஆகிய இடங்களிலும், உதிரி பாகங்கள் புதுப்பிக்கும் பிரிவு புதுக்கோட்டையிலும், டயர் புதுப்பிக்கும் பிரிவுகள் கும்பகோணம், திருச்சி, தேவகோட்டை மற்றும் புதுக்கோட்டை ஆகிய இடங்களிலும் இயங்கி வருகின்றன.

இப்போக்குவரத்துக்கழகத்தில் திருமயம் மற்றும் மண்ணச்சநல்லூர் ஆகிய இடங்களில் புதிய பணிமனைகள் தொடங்குவதற்கு கட்டுமான பணிகள் நடந்து கொண்டிருக்கிறது. எடமலைப்பட்டி புதூரில் கட்டுமானப் பணிகள் நிறைவடைந்து விரைவில் துவக்கப்படவுள்ளது. விராலிமலை, பாளையம், கீரனூர் ஆகிய இடங்களில் நில உரிமை மாற்றம் செய்யப்பட்டுள்ளது. கரூரில் கூடுதல் பணிமனை கட்டவும் மற்றும் சாயல்குடியில் புதிய பணிமனை கட்டவும் நுழைவு அனுமதி பெறப்பட்டு கட்டுமானப் பணிகள் தொடங்கப்படவுள்ளன. மேலும், திருவரங்கம், கும்பகோணம், பிரட்டையூர் மற்றும் மணமேல்குடி ஆகிய இடங்களில் புதிய பணிமனைகள் கட்டுவதற்கு நிலங்கள் கண்டறியப்பட்டு நிலஉரிமை மாற்றம் செய்யப்படவுள்ளது.

கும்பகோணம், நாகப்பட்டினம், திருச்சி, கரூர், காரைக்குடி மற்றும் புதுக்கோட்டை மண்டலங்களில் மின்னணுப் பயணச்சீட்டு இயந்திரம் சோதனை முறையில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

**திறன் மேம்பாட்டுக்கு நிதியுதவி**

இப்போக்குவரத்துக் கழகத்தில் தற்போதுள்ள பயிற்சி மையங்களின் வசதிகளை திறன் மேம்படுத்தும் பொருட்டு நடுவண் அரசின் சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகம் திட்டத்தின் 50% நிதியான ரூ.5 கோடியை வழங்கியுள்ளது.

திருச்சி மற்றும் காரைக்குடியில் உள்ள பயிற்சி மையங்களின் வசதிகளை மேம்படுத்துவதற்கான ஒப்பந்தப்புள்ளிக்கு இயக்குநர் குழுமத்தால் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

## 8.7 தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிமிடெட், மதுரை

இப்போக்குவரத்துக் கழகம், மதுரை மாநகரை தலைமையிடமாகக் கொண்டு பேருந்து இயக்கங்களை கண்காணிக்க மதுரை, திண்டுக்கல் மற்றும் விருதுநகர் ஆகிய

இடங்களில் மண்டல அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. நகர், புறநகர் மற்றும் மலைப்பகுதிகளில் பேருந்து சேவையை இயக்கி வருகின்றது.

- இக்கழகத்தின் பணிமனைகளின் எண்ணிக்கை 39 ஆகும். இக்கழகத்தின் மொத்த பேருந்துகளின் எண்ணிக்கை 2,477 மற்றும் வரையறுக்கப்பட்ட சேவைகளின் எண்ணிக்கை 2,166 ஆகும். இக்கழகத்தின் பணியாளர்களின் எண்ணிக்கை 15,477 ஆகும். இக்கழகம், சாதாரண மற்றும் விரைவு பேருந்துகளை இயக்கி வருகின்றது.

- இக்கழகத்தில் மதுரை, வத்தலக்குண்டு மற்றும் விருதுநகர் ஆகிய இடங்களில் பேருந்து கூண்டு கட்டும் பிரிவுகள் உள்ளன.

- கடந்த ஆறு ஆண்டுகளில் 925 புதிய பேருந்துகளும், 91 புதிய வழித்தடங்களும் தொடங்கப்பட்டுள்ளன.

- கடந்த சில ஆண்டுகளில், 2,000–க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் தாமாக முன்வந்து இரத்ததானம் செய்துள்ளனர்.

**பயணிகளுக்கான இதர வசதிகள்**

- இக்கழகத்தில் பயணிகளின் வசதிக்கேற்ப நகர் மற்றும் புறநகர் பேருந்துகளில் பயணம் செய்ய ஏதுவாக மாதாந்திர சலுகைக் கட்டண அனுமதிச் சீட்டு வழங்கப்பட்டு வருகின்றது.

- அம்மா குடிநீர் திட்டத்தின்கீழ் மதுரை, திண்டுக்கல், தேனி மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் 22 பேருந்து நிலையங்களில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் விற்பனை நிலையங்கள் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.
- **45** இரவு நேர நகரப்பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.
- திருவிழாக்களை முன்னிட்டு கீழ்க்கண்ட இடங்களுக்கு சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றது.

  (1 ) வீரபாண்டி ( 2 ) இருக்கன்குடி ( 3 ) வேளாங்கன்னி மற்றும் ( 4 ) பழனி

## 8.8 தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (திருநெல்வேலி) லிமிடெட், திருநெல்வேலி

இப்போக்குவரத்துக் கழகம், திருநெல்வேலி நகரை தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வருகிறது. இப்போக்குவரத்துக் கழகம், போக்குவரத்து சேவையை நகர் மற்றும் புறநகர் பகுதிகளில் கண்காணித்து மேம்படுத்த, திருநெல்வேலி, நாகர்கோவில் மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களில் மண்டல அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. இப்போக்குவரத்துக் கழகம் நகர மற்றும் புறநகரப் பேருந்துகளை இயக்கி வருகின்றது.

- இப்போக்குவரத்துக் கழகத்தின் பணிமனைகளின் எண்ணிக்கை 30 ஆகும். இப்போக்குவரத்துக் கழகத்தின் மொத்த பேருந்துகளின் எண்ணிக்கை 1,839 மற்றும் வரையறுக்கப்பட்ட சேவைகளின் எண்ணிக்கை 1,654 ஆகும். இக்கழகத்தின் பணியாளர்களின் எண்ணிக்கை 11,866 ஆகும். இக்கழகம் சாதாரண, விரைவு, அதிநவீன, மற்றும் அதிசொகுசு போன்ற பல்வேறு வகையான பேருந்துகளை இயக்கி வருகின்றது. திருநெல்வேலி மற்றும் நாகர்கோவில் ஆகிய இடங்களில் பேருந்து கூண்டு கட்டும் பிரிவுகள் உள்ளன.

- புதிய பணிமனை சேரன்மாதேவியில் **18.06.2015** அன்றும், சாத்தான்குளத்தில் **08.03.2017** அன்றும் திறந்து வைக்கப்பட்டன.
- **05.07.2014** அன்று திருநெல்வேலியில் ரூ. **1.00** கோடி மதிப்பீட்டில் புதிய தலைமை அலுவலக கட்டடம் திறக்கப்பட்டது.
- கடந்த ஏழு ஆண்டுகளில், **614** புதிய பேருந்துகளும், **66** புதிய வழித்தடங்களும் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன.
- தொழிலாளர்களுக்கு முழு உடல் பரிசோதனை திட்டத்தின் கீழ் **4822** தொழிலாளர்கள் முழு உடல் பரிசோதனை செய்து பயனடைந்துள்ளார்கள்.

**இப்போக்குவரத்துக் கழகம் பயணிகளின் வசதிக்காக கீழ்க்கண்ட கூடுதல் வசதியினை செய்து வருகின்றது.**

- இப்போக்குவரத்துக் கழகத்தால் திருச்செந்தூர், சங்கரன்கோவில், திருவில்லிபுத்தூர், உவரி, கன்னியாகுமரி மற்றும் குற்றாலம் போன்ற முக்கிய சுற்றுலா மற்றும் வழிபாட்டுத் தலங்களுக்கு பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

- அம்மா குடிநீர் திட்டத்தின் கீழ் திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி முதலிய மூன்று மாவட்டங்களில் **22** விற்பனை மையங்களில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் விற்பனை நிலையங்கள் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.
- தாமாக முன்வந்து இரத்ததானம் செய்யும் திட்டத்தின் கீழ் **5,500–**க்கு மேற்பட்ட பணியாளர்கள் இரத்ததானம் செய்துள்ளனர்.
- இப்போக்குவரத்துக் கழகத்தின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கன்னியாகுமரி பேருந்து நிலையத்தில் குழந்தைகளுக்கு தாய்பால் ஊட்டுவதற்கு தனி அறை அமைக்கப்பட்டு செயல்பாட்டிலுள்ளது.
- இப்போக்குவரத்துக் கழகத்தால் இரண்டு இரவு நேர பேருந்துகள் திருநெல்வேலி நகரத்திலும் மற்றும் ஒரு இரவு நேர பேருந்து நாகர்கோவில் நகரத்திலும் இயக்கப்பட்டு வருகின்றன.
- திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் நாகர்கோவில் மண்டலத்தின் **24** பேருந்துகள் மூலம் **53** நடைகள்

மகளிர் மற்றும் குழந்தைகளுக்கென இயக்கப்பட்டு வருகின்றன.

## 8.9 2016–17–ஆம் ஆண்டில் அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் வாங்கிய விருதுகள்

அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு அனைத்து மாநில சாலை போக்குவரத்துக் கழகங்களின் கூட்டமைப்பு (ASRTU) 2016–17 ஆண்டிற்கான கீழ்க்கண்ட விருதுகளை 27.02.2018 அன்று வழங்கியது.

| வ. எண். | கழகம் | விருது வகை | விருது |
|---|---|---|---|
| 1 | மாநகர் போக்குவரத்துக் கழகம் (சென்னை) லிமிடெட், சென்னை. | உயர்ந்தபட்ச உருளிப்பட்டையின் செயல்திறனுக்காக. | முதலிடம் கேடயம் |
| 2 | | 3000 பேருந்துகளுக்கு மேல் உள்ள போக்குவரத்துக் கழகங்களில் ஒரு லிட்டர் டீசலுக்கு அதிகமான கி.மீட்டர் இயக்கத்திற்காக (4.40 KMPL) | முதலிடம் கேடயம் |
| 3 | அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் தமிழ்நாடு லிமிடெட், சென்னை. | புறநகர் பேருந்துகளில் பேருந்து உற்பத்தித் திறனில் உயர்ந்தபட்ச செயல்திறனுக்காக (533.2 கி.மீ) | முதலிடம் கேடயம் |

| வ. எண். | கழகம் | விருது வகை | விருது |
|---|---|---|---|
| 4 | | புறநகர் சேவையில் எரிபொருள் 1 லிட்டருக்கு இயக்கப்படும் தூரத்தில் அதிகபட்ச முன்னேற்றம் (5.10இலிருந்து 5.16) | இரண்டாம் இடம் கேடயம் |
| 5 | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) லிமிடெட், விழுப்புரம். | குறைந்தபட்ச இயக்க செலவுக்கான விருது (வரி நீங்கலாக) - புறநகர் பிரிவு (1001க்கு மேல் 4000 பேருந்துகள்) – 30.93 CPKM | முதலிடம் கேடயம் |
| 6 | | புறநகர் சேவையில் 1 லிட்டர் டீசலுக்கு அதிகமான கி.மீட்டர் இயக்கத்திற்காக ( 1001 – 4000 பேருந்துகள்) 5.48 KMPL | முதலிடம் கேடயம் |
| 7 | | புறநகர் பேருந்துகளில் பேருந்து உற்பத்தித் திறனில் உயர்ந்தபட்ச செயல்திறனுக்காக (512.93 கி.மீ.) | இரண்டாம் இடம் கேடயம் |
| 8 | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம்) லிமிடெட், சேலம். | புறநகர் பேருந்துகளை இயக்கும் கழகங்களில் உருளிப்பட்டை செயல்திறனில் (சராசரியாக 3.58 கி.மீ) தொடர்ச்சியாக 4வது முறையாக முதலிடத்தை பெற்றுள்ளது. | முதலிடம் சான்றிதழ் |
| 9 | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோயம்புத்தூர்) லிமிடெட், கோயம்புத்தூர். | நகர பேருந்து இயக்கத்தில் அதிகபட்ச முன்னேற்றம் ஒரு லிட்டர் டீசலுக்கு அதிகமான கி.மீட்டர் இயக்கம் (4.84இலிருந்து 5.03 KMPL) | முதலிடம் கேடயம் |

| வ. எண். | கழகம் | விருது வகை | விருது |
|---|---|---|---|
| 10 | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிமிடெட், கும்பகோணம். | உயர்ந்தபட்ச உருளிப்பட்டையின் செயல்திறனுக்காக. | முதலிடம் கேடயம் |
| 11 | | ஒரு லிட்டர் டீசலுக்கு அதிகபட்ச கி.மீட்டர் இயக்கம் (1001 – 4000 பேருந்துகள்) (5.51 KMPL) தொடர்ச்சியாக 4வது முறையாக இந்த ஆண்டும் (2016–17) விருது. | முதலிடம் சான்றிதழ் |

## அத்தியாயம்–9

## தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம், சென்னை.

தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் **25.03.1975** அன்று துவக்கப்பட்டு தமிழகத்தில் உள்ள அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களுக்கு தேவையான மூலதனம் மற்றும் நடைமுறை மூலதன நிதியுதவியை பொது மக்களிடமிருந்து வைப்பீடுகள் பெறுவதன் மூலம் பூர்த்தி செய்து அரசின் நிதி ஒதுக்கீட்டை சார்ந்திருக்காமல் இருக்கும்பொருட்டு துவக்கப்பட்டது. இந்த நிறுவனம் இந்திய ரிசர்வ் வங்கியிடம் வங்கியல்லாத நிதி நிறுவனமாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

### 9.1 நிதிச் செயல்பாடு

தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் தொடங்கப்பட்ட **1975**ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு ஆண்டிலும் தொடர்ந்து ஆதாயம் ஈட்டி வருகிறது. இந்நிறுவனம் கடந்த ஏழு ஆண்டுகளாக ஈட்டிய ஆதாயம் பின்வருமாறு–

(ரூபாய் இலட்சங்களில்)

| ஆண்டு | வட்டி தள்ளுபடிக்கு முந்தைய ஆதாயம் | வட்டி தள்ளுபடி செய்தது | வட்டி தள்ளுபடிக்கு பின்பும் ஆனால் வருமான வரிக்கு முன்பும் ஆதாயம் | வருமான வரி | வருமான வரிக்குப் பிந்தைய ஆதாயம் |
|---|---|---|---|---|---|
| 2012–2013 | 2771.58 | 2061.42 | 710.16 | 230.45 | 479.71 |
| 2013–2014 | 3444.00 | 2703.00 | 741.00 | 240.45 | 500.55 |
| 2014–2015 | 3294.25 | 2509.00 | 785.25 | 269.69 | 530.48 |
| 2015–2016 | 5283.29 | 4648.68 | 634.61 | 212.95 | 423.36 |
| 2016–2017 | 7322.42 | 6469.00 | 853.42 | 282.17 | 571.25 |
| 2017–2018 (திருத்திய மதிப்பீடு) | 4914.62 | 3889.46 | 1025.16 | 338.95 | 686.21 |
| 2018–2019 (வரவு செலவு திட்ட மதிப்பீடு) | 4234.85 | 3107.17 | 1127.68 | 372.84 | 754.84 |

## 9.2 வைப்பீடுகள்

இந்நிறுவனம் பொது மக்களிடம் முதலீட்டிற்கு ஏற்ற நிறுவனம் என்ற நம்பகத்தன்மையைத் தொடர்ந்து பெற்று வந்துள்ளது. **31.03.2018** அன்றுள்ளபடி இந்நிறுவனத்தில் செய்துள்ள மொத்த வைப்புத்தொகை ரூபாய் **4,288.94** கோடியாகும்.

## 9.3 வைப்பீடுகளுக்கான வட்டி வீதங்கள்

வைப்பீடுகளுக்கான வட்டி வீதம் சந்தை நிலவரத்திற்கேற்பவும், போக்குவரத்து கழகங்களின் நிதித் தேவை மற்றும் கடனை திருப்பிச் செலுத்தும் தன்மைக்கேற்ப வழங்கப்படுகின்றது.

இதர அரசு நிதி நிறுவனங்களின் வட்டி வீதங்களுக்கு இணையாக இந்நிறுவனம் வட்டி வீதத்தை மாற்றி அமைத்து வருகிறது. தற்போதைய வட்டி வீதங்கள் கீழ்க்கண்டவாறு மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

| காலம் | வைப்பீடுகளுக்கான வட்டி வீதங்கள் (கூட்டு வட்டி மாதாந்திர அடிப்படையில் கணக்கிடப்படுகிறது) 16.05.2018 முதல் | |
|---|---|---|
| | பொதுமக்கள் | மூத்த குடிமக்கள் |
| 12 மாதங்கள் | 7.50% | 7.75% |
| 24 மாதங்கள் | 7.75% | 8.00% |
| 36 மாதத்தில் இருந்து 60 மாதங்கள் வரை | 8.25% | 8.75% |

## 9.4 வைப்பீட்டுத் திட்டங்கள்

தற்போது வைப்பீட்டில் கீழ்க்கண்ட இரு திட்டங்கள் உள்ளன.

| | திட்டம் 1 | திட்டம் 2 |
|---|---|---|
| | குறித்த காலம்தோறும் வட்டி வழங்கும் திட்டம் | பணப்பெருக்குத் திட்டம் |
| குறைந்தபட்ச வைப்பீடு | ரூ.10,000/– | ரூ.10,000/– |
| காலம் (மாதங்களில்) | 24, 36, 48 மற்றும் 60 | 12, 24, 36, 48 மற்றும் 60 |
| வட்டி விகிதம் | 24 மாதங்கள் – காலாண்டு, 36 – 60 மாதங்கள் – மாதம், காலாண்டு மற்றும் ஆண்டு வட்டி | முதிர்வுறும்போது (கூட்டுவட்டி மாதந்திர அடிப்படையில் கணக்கிடப்படுகிறது) |

**9.5 பெண் குழந்தைகள் பாதுகாப்புத்திட்ட வைப்பீடுகள்**

தமிழக அரசின் சமூக நலத்துறையின் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் **31.03.2018** அன்றுள்ளவாறு **112405** பயனாளிகளுடன் ரூ. **17.05** கோடி வைப்பீடாக உள்ளது.

**9.6 நிறுவனத்தின் நிதி நிலை**

**31.03.2018**–ஆம் ஆண்டு நிலவரப்படி இந்நிறுவனத்தின் நிதி ஆதாரங்கள் பின்வருமாறு–

(ரூபாய் கோடியில்)

| | | |
|---|---|---|
| மூலதனம்<br>அ) அரசின் பங்குத்தொகை<br>ஆ) அரசு போக்குவரத்துக் கழகங்களின் பங்குத்தொகை | <br>43.03<br>18.71<br>------ | <br><br><br>61.74 |
| மிகுதித் தொகை மற்றும் ஒதுக்கீடு | | 129.94 |
| வைப்பீடுகள் | | 4,288.94 |
| மொத்தம் | | **4,480.62** |

**9.7 கடன்கள்**

**2017–2018**–ஆம் நிதியாண்டில் போக்குவரத்து கழகங்களுக்கு அளிக்கப்பட்ட கடன் உதவிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

(ரூபாய் கோடியில்)

| | கடன்கள் | தொகை |
|---|---|---|
| 1. | தவணைக்கொள்முதல் கடன்கள் | 23.62 |
| 2. | குறுகிய கால கடன் மோட்டார் வாகன அரையாண்டு வரி செலுத்துவதற்காக மற்றும் இதர கடன்களுக்காக கொடுக்கப்பட்டது. | 1,606.83 |
| 3. | பருவக்கடன்கள் நடைமுறை மூலதனத்திற்காக வழங்கியது | 2,290.21 |
| | **மொத்தம்** | **3,920.66** |

இந்த நிறுவனத்தின் குறுகிய கால கடன் உதவியினால் அனைத்து போக்குவரத்து கழகங்களும் அரையாண்டிற்கான மோட்டார் வாகன வரியை மொத்தமாக செலுத்தியதால் வாகன வரியில் நான்கு சதவீதம் தள்ளுபடி பெற்று போக்குவரத்துக் கழகங்களின் செலவினைக் குறைக்க உதவியது.

தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்து கழகங்களுக்கு அளித்த கடனுதவி விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

(ரூபாய் கோடியில்)

| ஆண்டு | நிதியுதவிகள் |
|---|---|
| **2012–2013** | 1,306.23 |
| **2013–2014** | 1,652.48 |
| **2014–2015** | 2,151.24 |
| **2015–2016** | 2,776.33 |
| **2016–2017** | 3,574.32 |
| **2017–2018** (திருத்திய மதிப்பீடு) | 3,920.66 |
| **2018–2019** (வரவு செலவு திட்ட மதிப்பீடு) | 1,511.29 |

### 9.8 புதிய கடன்களுக்கு வட்டி வீதம்

இந்நிறுவனம் அனைத்து போக்குவரத்துக் கழகங்களுக்கும் வழங்கிய புதிய கடன்களுக்கான வட்டி வீதம் கீழ்க்கண்டவாறு மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

| | தவணைக் கொள்முதல் கடன்கள் | நாளன்றுள்ளவாறு |
|---|---|---|
| தவணைக் கொள்முதல் கடன்கள் | **9.75%** | 01.01.2018 |
| குறித்த காலக் கடன்கள் | 10.00% | 01.04.2017 |
| குறுகிய கால கடன்கள்(சம்பளம்) | **10.25%** | |

**9.9 2018–19–ம் ஆண்டின் திட்டங்கள்**

இந்நிறுவனம், வரும் நிதியாண்டில் போக்குவரத்துக் கழகங்களுக்கு 760 புதிய பேருந்துகள் வாங்க கூடுதலாக ரூ.150.97 கோடியும், 2012–13–இல் ஒப்பளிக்கப்பட்டு விடுபட்டு போன 76 பேருந்துகள் வாங்குவதற்கு ரூ.10.32 கோடியும் நிதியுதவி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இது தவிர, மோட்டார் வாகன வரி, ஊக்கத்தொகை மற்றும் நடைமுறை மூலதனம் ஆகியவற்றிற்கு ரூ.1350.00 கோடி நிதியுதவி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

## அத்தியாயம்–10

### பல்லவன் போக்குவரத்து அறிவுரைப் பணிக்குழு, சென்னை

பல்லவன் போக்குவரத்து அறிவுரைப் பணிக்குழு, **1984**–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் போக்குவரத்துத்துறை வளர்ச்சிக்கான ஆலோசனைகளை அளிக்கும் நோக்கத்துடன் ரூ.**50** லட்சம் அனுமதிக்கப்பட்ட மூலதனத்துடன், ரூ.**10** லட்சம் வழங்கப்பட்ட பங்கு மூலதனத்துடன், தமிழக அரசின் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக தொடங்கப்பட்டது. தற்போது நிறுவனம் ரூ.**0.41** கோடி அளவிற்கு நட்டத்தில் இயங்குவதால் இந்நிறுவன பணிகளை சாலை போக்குவரத்து நிறுவனத்திற்கு மாற்ற நடவடிக்கை தொடங்கப்பட்டுள்ளது.

## அத்தியாயம்–11

### சாலை போக்குவரத்து நிறுவனம், சென்னை

சாலை போக்குவரத்து நிறுவனம், சங்கங்கள் பதிவு சட்டம் **1860**ன் கீழ் பதிவு செய்யப்பட்டு **1976** ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இந்நிறுவனம் சாலை போக்குவரத்து தொடர்பான மேம்பாட்டு பணிகள், சாலை விபத்து ஆய்வு மற்றும் ஆராய்ச்சி பணிகள், பேருந்து தரம் மற்றும் பேருந்து மேலாண்மை, அரசு போக்குவரத்துக் கழகங்களால் கொள்முதல் செய்யப்படும் உதிரி பாகங்களின் தரத்தினை பரிசோதித்தல், மற்றும் போக்குவரத்துக் கழக அலுவலர்கள் / பணியாளர்கள் மற்றும் பொது மக்களுக்கு பயிற்சி அளித்தல் ஆகியவற்றை முக்கிய குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றது.

சாலை போக்குவரத்து நிறுவனம், கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி மையங்களை கும்மிடிப்பூண்டி, திருச்சி ஆகிய இடங்களிலும் மற்றும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களுடன் இணைந்து **15** இடங்களிலும் பயிற்சி அளித்து வருகிறது. அனைத்து பயிற்சி மையங்களிலும் சேர்த்து **2017–18**–ம் ஆண்டு வரை **58,452** நபர்களுக்கு கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மேலும், சாலை போக்குவரத்து நிறுவனத்தின் இலகுரக ஓட்டுநர் பயிற்சி

மையங்கள் சென்னை, ஈரோடு மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன.

போக்குவரத்துக் கழக அலுவலர்கள் மற்றும் தொழிலாளர்களின் திறன்களை மேம்படுத்துவதற்காக ஒவ்வொரு ஆண்டும் பயிற்சி அட்டவணை தயாரிக்கப்பட்டு, சாலை போக்குவரத்து நிறுவனம் மற்றும் போக்குவரத்துக் கழக தலைமை அலுவலகங்களிலும் புத்தாக்கப் பயிற்சிகள் நடத்தப்பட்டு வருகிறது. **2017–18** வரை நடைபெற்ற **1,856** புத்தாக்கப் பயிற்சிகளின் மூலம் மொத்தம் **39,569** போக்குவரத்துக் கழக அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் பயனடைந்துள்ளனர்.

போக்குவரத்துக் கழக தொழிலாளர்கள் மற்றும் அலுவலர்கள் பதவி உயர்வு பெறுவதற்கான தேர்வுகள் ஆண்டுதோறும் இந்நிறுவனத்தால் நடத்தப்பட்டு வருகின்றது.

இந்நிறுவன பரிசோதனைக் கூடத்தில் **47** மோட்டார் வாகன உதிரிபாகங்கள் பரிசோதனை செய்ய உபகரணங்கள் நிறுவப்பட்டுள்ளது. **2017–18–**ம் ஆண்டுவரை **5,833** மாதிரிக் கூறுகள் (Samples) பரிசோதனை செய்யப்பட்டது.

சாலை போக்குவரத்து நிறுவனத்தின் ஆராய்ச்சி பிரிவு இதுவரை **526** ஆராய்ச்சி அறிக்கைகள், **30** ஆலோசனை அறிக்கைகள், விபத்து ஆராய்ச்சி கையேடு மற்றும் தொழில்நுட்ப கையேடு ஆகியவற்றை போக்குவரத்து கழகங்களுக்காக வெளியிட்டுள்ளது. இப்பிரிவு, அரசு போக்குவரத்துக் கழக பேருந்துகளால் ஏற்படும் விபத்துகள் குறித்து விசாரணை நடத்துவதற்காக விபத்து ஆராய்ச்சி கையேட்டினை வெளியிட்டுள்ளது. இந்நிறுவனம், அரசு போக்குவரத்துக் கழகங்கள் பயன்பெறும் வகையில் தொழில்நுட்ப கையேட்டினை வெளியிட்டுள்ளது.

அனைத்து போக்குவரத்துக் கழகங்களுக்கு தேவையான முக்கிய பொருட்களாகிய பேருந்து அடிச்சட்டங்கள், உருளிப்பட்டை, பேருந்து கூண்டு கட்டுதல், முழுவதுமாக கட்டப்பட்ட பேருந்துகள், பயணச்சீட்டு அச்சிடுதல், டயர் புதுப்பிக்கத் தேவையான அடிப்படை பொருட்கள், மசகு எண்ணெய் (லூப்ரிகன்ட்ஸ்) மற்றும் அம்மா குடிநீர் தயாரிப்பதற்கான மூல பொருட்கள் ஆகியவைகளின் விலை மற்றும் ஒப்பந்த விதிகளை முடிவு செய்ய, சாலை போக்குவரத்து நிறுவனம் ஒருங்கிணைப்பு முகமையாக (Nodal Agency) செயல்பட்டு வருகிறது.

போக்குவரத்து, மோட்டார் வாகன ஆய்வு மற்றும் வளர்ச்சி பணிகளுக்காகவும், போக்குவரத்துக் கழகப் பணியாளர்களின் வாரிசுதாரர்களின் நலனுக்காகவும், 1984–ஆம் ஆண்டில் சாலை மற்றும் போக்குவரத்து பொறியியல் கல்லூரி இந்நிறுவனத்தால் ஈரோடு மாவட்டம் சித்தோடில் துவக்கப்பட்டது. இக்கல்லூரியில், இளநிலை மற்றும் முதுநிலை பட்டப்படிப்பில் ஆண்டுதோறும் 528 மாணவ, மாணவியர்கள் அனுமதிக்கப்படுகிறார்கள். இக்கல்லூரியில் இதுவரை 8,983 மாணாக்கர்கள் இளநிலை பொறியியலிலும் (பி.இ), 191 மாணாக்கர்கள் முதுகலை (கட்டடவியல்) பொறியியலிலும் (எம்.இ), 18 மாணாக்கர்கள் முதுகலை (வெப்பவியல்) பொறியியலிலும், 27 மாணாக்கர்கள் முதுகலை (கணினி) அறிவியலிலும், 923 மாணாக்கர்கள் முதுகலை கணினி பயன்பாட்டியலில் முதுகலை (எம்.சி.ஏ) பட்டங்களும் பெற்றுள்ளனர்.

அரசு போக்குவரத்துக் கழகப் பணியாளர்களின் வாரிசுகளின் நலன்களுக்காகவும், மருத்துவ ஆராய்ச்சி பணியினை மேற்கொள்ளவும் பெருந்துறை மருத்துவக் கல்லூரி 1986 முதல் இந்நிறுவனத்தின் கீழ் ஆண்டொன்றுக்கு

60 மாணவர்களுடன் செயல்பட்டு வருகின்றது. இக்கல்லூரியில் மாணவர்களின் எண்ணிக்கை 2017–18–ஆம் ஆண்டில் 100 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இதுவரை இம்மருத்துவக் கல்லூரி 2,018 மருத்துவர்களை உருவாக்கியுள்ளது. தற்போது, இக்கல்லூரியில் நிதிப்பற்றாக்குறை நிலவுவதால் அதனை சரிசெய்து சீரான நிலைக்கு கொண்டு வரும் வழிகள் ஆராயப்பட்டு வருகின்றன.

மேலும், இம்மருத்துவக் கல்லூரி வளாகத்தில் செவிலியர் பட்டயப் படிப்பு 2008–09 ஆண்டு முதல் நடத்தப்பட்டு வருகிறது. ஆண்டுதோறும் 20 மாணவியர்கள் அனுமதிக்கப்படுகிறார்கள்.

இவை தவிர சாலை போக்குவரத்து நிறுவனத்தின் கீழ் மூன்று தொழில்நுட்ப பயிலக கல்லூரிகள், குரோம்பேட்டை (சென்னை), பர்கூர் (கிருஷ்ணகிரி) மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் 1992–93 ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகின்றன. இம்மூன்று தொழில்நுட்ப கல்லூரிகளிலும் ஆண்டுதோறும் மொத்தம் 700 மாணவர்கள் அனுமதிக்கப்படுகிறார்கள். இம்மூன்று தொழில்நுட்பக்

கல்லூரிகளிலும் சேர்ந்து 2017 வரை 8,758 மாணவர்கள் பட்டயங்கள் பெற்றுள்ளனர்.

இந்நிறுவனத்தால் நடத்தப்படும் கல்லூரிகளில் அரசு மற்றும் நிர்வாக ஒதுக்கீட்டின் கீழ் தற்போது நிரப்பப்படும் இடங்களின் விவரம் பின்வருமாறு:–

| வ. எண் | பிரிவுகள் | மொத்த இடங்கள் | அரசு ஒதுக்கீட்டு இடங்கள் | நிர்வாக ஒதுக்கீட்டு இடங்கள் |
|---|---|---|---|---|
| 1. | பெருந்துறை மருத்துவக் கல்லூரி மருத்துவ பட்டப்படிப்பு | 100 | 70 (70%) | 30(30%) |
| 2. | சா.போ.நி செவிலியர் பட்டயப் பள்ளி | 20 | – | 20 (100%) |
| 3. | பொறியியல் கல்லூரி | | | |
| (அ) | இளங்கலை பொறியியல் பட்டப் பிரிவு | 420 | 273 (65%) | 147 (35%) |
| (ஆ) | முதுகலைப் பட்டம் கட்டடவியல் | 24 | 17 (72%) | 7 (28%) |
| (இ) | முதுகலைப் பட்டம் கணினி பொறியியல் | 24 | 17 (72%) | 7 (28%) |
| (ஈ) | முதுகலைப் பட்டம் கணினி பயன்பாடு (MCA) | 60 | 30 (50%) | 30 (50%) |
| 4. | தொழில்நுட்ப பயிலகங்கள் | 700 | 350 (50%) | 350 (50%) |

சாலை போக்குவரத்து நிறுவனம் மற்றும் அதன் கல்வி நிறுவனங்களுக்கான மூலதனச் செலவினங்களை தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் ஏற்றுக் கொள்கின்றன. சாலை போக்குவரத்து நிறுவனம் **2013–**ஆம் ஆண்டு முதல் அரசாணை (நிலை) எண்.6,போக்குவரத்து (அ) துறை, நாள் 08.01.2013-ன்படி போக்குவரத்துக் கழகங்களுக்கு கொள்முதல் செய்யப்படும் பொருட்களை வழங்குபவர்களிடமிருந்து சிறப்பு நிர்வாக தள்ளுபடி மூலம் செலவினங்களை ஈடு செய்கின்றன. கல்வி நிறுவனங்களின் அன்றாட செலவினங்களை இதர ஆதாரங்கள் மற்றும் அனைத்து போக்குவரத்து கழகங்களில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் தொழிலாளர்களிடமிருந்து பெறப்படும் வட்டியில்லா கடன் தொகை வைப்புநிதியிலிருந்து வரும் வட்டி வருமானம், கல்விக் கட்டணம், மருத்துவமனை வருமானம் ஆகியவற்றின் மூலம் ஈடு செய்யப்படுகின்றது. தற்போது, சாலை போக்குவரத்து நிறுவன கல்வி நிலையங்களில் **679** பணியாளர்கள் பணிபுரிகின்றனர்.

## அத்தியாயம்–12

## சாலை போக்குவரத்து நிறுவனத்தின் ஆராய்ச்சி பிரிவு

### 12.1 சாலை போக்குவரத்து இதழ்

சாலை போக்குவரத்து நிறுவனம் சாலைப் போக்குவரத்து, சாலைப் பாதுகாப்பு, விபத்து ஆய்வு மற்றும் மின்னணு பயணச்சீட்டு முறை போன்ற தகவல்களை உள்ளடக்கிய "Journal of Road Transport" என்கிற காலாண்டு இதழை வெளியிடுகின்றது.

### 12.2 உதிரி பாகங்கள் பரிசோதனை மற்றும் தரம் கண்காணித்தல்

அகில இந்திய சாலை போக்குவரத்துக் கழகம் (ASRTU) மற்றும் இந்திய தர நிர்ணய அமைப்பு (BIS) நிர்ணயித்த குறியீடுகளின்படி பேருந்தில் பயன்படுத்தப்படும் 47 வகையான உதிரி பாகங்களை பரிசோதனை செய்வதற்கான உபகரணங்கள் இந்நிறுவனத்தில் உள்ள பரிசோதனைக் கூடத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இப்பரிசோதனைக் கூடத்தில் **2017–18** வரை **5,833** உதிரி பாகங்கள் பரிசோதனை செய்யப்பட்டது.

## 12.3 போக்குவரத்துக் கழக அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கான தேர்வு

அரசுப் போக்குவரத்துக் கழக பணியாளர்கள் மற்றும் அலுவலர்கள் பதவி உயர்வு அளிப்பதற்காக மேலாளர்கள் தேர்வு மற்றும் இதர பிரிவினர்களுக்கான 2017–18–ஆம் ஆண்டிற்கான தேர்வு ஜூன் 2017–ல் இந்நிறுவனத்தால் நடத்தப்பட்டது. இத்தேர்வுகளில் கலந்து கொண்டோர் மற்றும் தேர்ச்சி பெற்றோர் விபரம் பின்வருமாறு:–

| வ. எண் | தேர்வு விபரம் | தேர்வில் பங்கேற்றவர் | தேர்ச்சி–யடைந்தோர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| 1. | மேலாளர்கள் பதவிக்கான தேர்வு | 370 | 308 | 83.24% |
| 2. | கண்காணிப்பாளர் / மேற்பார்வையாளர் பதவிகளுக்கான தேர்வு | 641 | 560 | 87.36% |
| | **மொத்தம்** | **1,011** | **868** | **85.85%** |

## 12.4 போக்குவரத்து மைய கொள்முதல் பிரிவு

அனைத்து போக்குவரத்துக் கழகங்களுக்கு தேவையான முக்கிய பொருட்களாகிய பேருந்து அடிச்சட்டங்கள் (Chassis), பேருந்து கூண்டு கட்டுதல் (Bus Body Building), முழுவதுமாக கட்டப்பட்ட பேருந்துகள்

(Fully Built Buses), உருளிப்பட்டைகள் (Tyres), பயணச்சீட்டு அச்சிடல் (Printing of Tickets), உருளிப்பட்டை புதுப்பிக்கும் பொருட்கள் (R.T. Materials), மசகு எண்ணெய் (Lubricants) மற்றும் அம்மா குடிநீர் பாட்டில்கள் தயாரிப்பு மூலப்பொருட்கள் ஆகியவற்றின் விலை மற்றும் ஒப்பந்த விதிகளை முடிவு செய்ய, சாலை போக்குவரத்து நிறுவனம் ஒருங்கிணைப்பு அலுவலகமாக செயல்பட்டு வருகின்றது. மேலும், ஏற்கனவே செயல்பட்டு வந்த உயர்மட்டக் குழுவிற்கு பதிலாக ஒப்பந்தப்புள்ளி முடிவு செய்யும் குழுவினை அரசு அமைத்துள்ளது. மேற்படி, ஒப்பந்தப்புள்ளி முடிவு செய்யும் குழுவானது **2017–18–**ஆம் ஆண்டில் ஆறு முறை கூட்டம் நடத்தி மாணவர்களுக்கான இலவச பயண அட்டை, உருளிப்பட்டைகள் (Tyres), பயணச்சீட்டு அச்சிடல் (Printing of Tickets), அடிச்சட்டங்களுக்கான திருத்தம், உருளிப்பட்டை புதுப்பிக்கும் பொருட்கள் (R.T. Materials), மசகு எண்ணெய் (Lubricants) மற்றும் அம்மா குடிநீர் பாட்டில்கள் போன்றவற்றுக்கான விலையை இறுதி செய்தது.

## 12.5 இலகுரக பொறியியல் பயிற்சி

சாலை போக்குவரத்து நிறுவன தொழில்நுட்ப கல்லூரிகளில் 2017–18 இலகுரக பொறியியல் பயிற்சி நடத்திட திட்டவரைவு தயார் செய்யப்பட்டு தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**செயல்பாட்டில் உள்ள திட்டங்கள்**

1. பசுமை நிதி மற்றும் ஃபெம் நிதி (Fame funding) உதவியுடன் அனைத்து தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கான “மின்கலத்தினால் இயங்கும் பேருந்துகள்” திட்ட வரைவானது நடுவண் அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
2. புதிய பேருந்து கூண்டு கட்டமைப்பு குறியீடு எண்: AIS -052 செயல்பாட்டில் உள்ளது. நிலை ஒன்று மற்றும் நிலை இரண்டிற்கான அனுமதியினை தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிமிடெட், பெற்றுள்ளது.
3. ஜனவரி–டிசம்பர் 2017 தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் விபத்து ஆய்வறிக்கை தயாரிக்கும் பணி முடிவடைந்துள்ளது.

## அத்தியாயம்–13

## சாலை போக்குவரத்து நிறுவனத்தின் மேலாளர் மற்றும் நிர்வாக அலுவலர்களுக்கான பயிற்சி திட்டம்

போக்குவரத்துக் கழக அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கென பல்வேறு பயிற்சிகள் போக்குவரத்துக் கழக தலைமை அலுவலகங்கள் மற்றும் சாலை போக்குவரத்து நிறுவனம் ஆகிய இடங்களில் நடத்தப்படுகின்றன. இப்பயிற்சிகளை சிறந்த முறையில் நடத்திட ஆண்டு தோறும் கால அட்டவணை தயாரித்து போக்குவரத்துக் கழகங்களுக்கு அனுப்பப்பட்டு அதன்படி பயிற்சிகள் நடத்தப்படுகின்றன. பல்வேறு பயிற்சிகளில் கலந்து கொண்டு பயனடைந்தோர் விவரம் பின்வருமாறு:–

| வ. எண் | விவரம் | பயிற்சி வகுப்புகள் எண்ணிக்கை | | | கலந்து கொண்ட நபர்களின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | 2016–17 வரை | 2017–18 | மொத்தம் | 2016–17 வரை | 2017–18 | மொத்தம் |
| 1. | போக்குவரத்து கழக அலுவலகங்களில் நடத்தப்பட்ட பயிற்சிகள் | 412 | 0 | 412 | 12,498 | 0 | 12,498 |
| 2. | சாலை போக்குவரத்து நிறுவனம், தரமணியில் நடத்தப்பட்ட பயிற்சிகள் | 923 | 39 | 962 | 16,585 | 750 | 17,335 |
| 3. | கூட்டங்கள், கருத்தரங்குகள் மற்றும் இதர பயிற்சிகள் | 485 | 4 | 489 | 9,792 | 70 | 9,862 |
| மொத்தம் | | 1820 | 43 | 1,863 | 38,875 | 820 | 39,695 |

34 பணியாளர்கள் தரமணி தலைமை அலுவலகத்தில் பணி புரிந்து வருகின்றனர். அவர்களில் ஏழு அலுவலர்கள் அயற்பணி முறையில் பணி புரிந்து வருகின்றனர்.

**ஓட்டுநர் பயிற்சி மையம்**

**13.1 கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி மையம், கும்மிடிப்பூண்டி**

கும்மிடிப்பூண்டி ஓட்டுநர் பயிற்சி மையத்தில் 12 வார கால கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி விஞ்ஞான முறைப்படி அளிக்கப்பட்டு வருகிறது. கும்மிடிப்பூண்டி ஓட்டுநர் பயிற்சிப் பிரிவில் காலாண்டிற்கு 150 மாணவர்கள் வீதம் ஆண்டுதோறும் சுமார் 600 மாணவர்களுக்கு கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி அளிக்க வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. கனரக வாகன ஓட்டுநர் பயிற்சிக்கு தேவையான மாணவர்களை தேர்ந்தெடுக்க செய்தித்தாள்களில் விளம்பரம் மூலம் விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டு, நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டு மேற்கண்ட தகுதிகளுடைய விண்ணப்பதாரர்கள் பயிற்சிக்கு தேர்வு செய்யப்படுகின்றனர். மேலும், ஆதிதிராவிடர் நலத்துறை, பிற்பட்டோர், மிகவும் பிற்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை மூலம் பரிந்துரை செய்யப்படும் நபர்களுக்கும் கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி அளிக்கப்படுகின்றது.

கும்மிடிப்பூண்டி ஓட்டுநர் பயிற்சிப் பிரிவில் 12 வார கனரக ஓட்டுநர் பயிற்சி தவிர, போக்குவரத்துக் கழக ஓட்டுநர்கள், பொதுத் துறை நிறுவனம் மற்றும் தனியார் துறை நிறுவன ஓட்டுநர்கள் பயன்பெறும் வகையில் தற்காப்பாக வாகனம் ஓட்டுதல் பயிற்சி, ஆபத்தான பொருட்களை ஏற்றிச் செல்லும் ஓட்டுநர்களுக்கான சிறப்பு பயிற்சி, சாலைப் பாதுகாப்பு விதிகள், எரிபொருள் சிக்கனம், விபத்துக்குள்ளான ஓட்டுநர்களுக்கான சிறப்பு பாதுகாப்பு ஓட்டுநர் பயிற்சி போன்ற பல்வேறு புத்தாக்க மற்றும் புனர்பயிற்சிகள் ஒரு மாதம், 15 நாட்கள், 5 நாட்கள், 3 நாட்கள், 2 நாட்கள் மற்றும் ஒரு நாள் அளிக்கப்படுகின்றது.

தற்போது, கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி, கும்மிடிப்பூண்டி மற்றும் திருச்சியை தவிர தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களுடன் இணைந்து திருச்சி, மதுரை, நாகர்கோவில், திண்டுக்கல், திருநெல்வேலி, விருதுநகர், சேலம், தருமபுரி, ஈரோடு, பொள்ளாச்சி, விழுப்புரம், வேலூர், கும்பகோணம், காரைக்குடி, திருச்சி மற்றும் புதுக்கோட்டை ஆகிய 15 மையங்களில் நடத்தப்பட்டு வருகின்றன.

இவ்வோட்டுநர் பயிற்சி மையத்தில் கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி மற்றும் புனர் பயிற்சி பெற்றோர் விவரம் பின்வருமாறு:–

| வ. எண் | விவரம் | பயிற்சி பெற்றோர் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|
| | | 2016–17 | 2017–18 | மொத்தம் |
| 1 | கும்மிடிப்பூண்டி | 21,842 | 395 | 22,237 |
| 2 | திருச்சி | 2,239 | 66 | 2,305 |
| 3 | இதர தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழக பயிற்சி மையங்களில் | 32,995 | 915 | 33,910 |
| | **மொத்தம்** | **57,076** | **1,376** | **58,452** |
| 4 | புனர் பயிற்சிகள் (கும்மிடிப்பூண்டியில் மட்டும்) | **55,939** | **2,304** | **58,243** |

## 13.2 இலகுரக வாகன ஓட்டுநர் பயிற்சி பள்ளிகள்

இரண்டு இலகுரக வாகன ஓட்டுநர் பயிற்சி பள்ளிகள் சென்னை மற்றும் திருச்சிராப்பள்ளியில் **1997–98**ம் ஆண்டிலிருந்து இயங்கி வருகின்றன. இலகுரக வாகன ஓட்டுனர் பயிற்சி பள்ளிகள் தற்போது ஈரோட்டிலும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இப்பயிற்சி மையங்கள் இதுவரை இலகுரக வாகன ஓட்டுநர் பயிற்சி முடித்தவர்களின் விவரம் பின்வருமாறு:–

| வ. எண். | விவரம் | பயிற்சி பெற்றோர் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|
| | | 2016–17 | 2017–18 | மொத்தம் |
| 1. | தரமணி, சென்னை | 2,016 | 188 | 2,204 |
| 2. | திருச்சி | 885 | 87 | 972 |
| 3. | ஈரோடு | 176 | 59 | 235 |
| | மொத்தம் | 3,077 | 334 | 3,411 |

மேலும், அரசின் ஆணைக்கிணங்க கனரக வாகன ஓட்டுநர் உரிமம் புதுப்பித்தலுக்காக ஒரு நாள் சிறப்பு பயிற்சி நடத்தப்பட்டு வருகிறது. இப்பயிற்சியில் கலந்து கொண்டு பயனடைந்தோர் விவரம் பின்வருமாறு:–

| வ. எண் | விவரம் | பயிற்சி பெற்றோர் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|
| | | 2016–17 | 2017–18 | மொத்தம் |
| 1. | தரமணி, சென்னை | 6,125 | 183 | 6,308 |
| 2. | கும்மிடிப்பூண்டி | 3,255 | 74 | 3,329 |
| 3. | திருச்சி | 23,906 | 53 | 23,959 |
| | மொத்தம் | 33,286 | 310 | 33,596 |

ஓட்டுநர் திறனை மேம்படுத்துவதற்காக, தரமணியிலுள்ள ஓட்டுநர் பயிற்சி மாதிரி வளாகத்தினை இதுவரை 2425 நபர்கள் பயன்படுத்தி உள்ளனர்.

கும்மிடிப்பூண்டி பயிற்சிப் பிரிவில் மொத்தம் 22 பணியாளர்கள் பணி புரிந்து வருகின்றனர். இவர்களில் 10 நபர்கள் போக்குவரத்துக் கழகங்களிலிருந்து அயற்பணியில் பணிபுரிந்து வருகின்றனர்.

# அத்தியாயம்–14

## சாலை போக்குவரத்து நிறுவனத்தின் கல்வி நிறுவனங்கள்

### 14.1 சாலை மற்றும் போக்குவரத்து பொறியியல் கல்லூரி, சித்தோடு

போக்குவரத்து மற்றும் மோட்டார் வாகன ஆய்வு மற்றும் வளர்ச்சி பணிகளுக்காக 1984–ஆம் ஆண்டில் சாலை மற்றும் போக்குவரத்து பொறியியல் கல்லூரி இந்நிறுவனத்தால் ஈரோடு மாவட்டம் சித்தோடில் துவக்கப்பட்டது. இக்கல்லூரியில் தற்பொழுது கற்பிக்கப்படும் பிரிவுகள் மற்றும் மாணவர்களின் எண்ணிக்கை பின்வருமாறு:–

| வ. எ. | பிரிவு | தொடங்கப்–பட்ட ஆண்டு | ஆண்டிற்கு அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை | தற்போது முதலாண்டில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை | முதலாமாண்டு முதல் நான்காம் ஆண்டு வரை மொத்த மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (அ) பட்டப் படிப்புகள் | | | | | |
| 1. | தானியங்கி பொறியியல் | 1984 | 60 | 53 | 258 |
| 2. | இயந்திர பொறியியல் | 1984 | 60 | 54 | 266 |
| 3. | கட்டட கலை பொறியியல் | 1984 | 60 | 38 | 237 |
| 4. | கணினி அறிவியல் மற்றும் பொறியியல் | 1984 | 60 | 51 | 229 |
| 5. | மின்னணுவியல் &தொலை தொடர்பு பொறியியல் | 1992 | 60 | 50 | 241 |

| வ. எ. | பிரிவு | தொடங்கப்–பட்ட ஆண்டு | ஆண்டிற்கு அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை | தற்போது முதலாண்டில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை | முதலாமாண்டு முதல் நான்காம் ஆண்டு வரை மொத்த மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 6. | மின்சாரம் மற்றும் மின்னணு பொறியியல் | 1992 | 60 | 53 | 253 |
| 7. | தகவல் தொழில்நுட்ப பொறியியல் | 2002 | 60 | 39 | 200 |
| (ஆ) முதுகலை பட்ட மேற்படிப்புகள் | | | | | |
| 8. | கணினி பயன்பாட்டில் முதுகலை பட்டம் (MCA) | 1996–97 | 60 | 0 | 29 |
| 9. | முதுகலை பட்டம் (கட்டடவியல்) | 2003–04 | 24 | 14 | 34 |
| 10. | முதுகலை பட்டம் (கணினி அறிவியல்) | 2014–15 | 24 | 2 | 7 |
| மொத்தம் | | | 528 | 354 | 1,754 |

இப்பொறியியல் கல்லூரியில் 80 ஆசிரியர்கள் மற்றும் 78 ஆசிரியரல்லாத பணியாளர்கள் சேர்த்து மொத்தம் 158 பணியாளர்கள் பணிபுரிகிறார்கள். இக்கல்லூரியில் பணிபுரியும் ஆசிரியர்களில் 42 ஆசிரியர்கள் முனைவர் பட்டம் பெற்றுள்ளனர்.

இங்குள்ள எட்டு தங்கும் விடுதிகளில் 1,054 மாணவ, மாணவியர்கள் தங்கி கல்வி பயில்கின்றனர். இப்பொறியியல் கல்லூரி நூலகத்தில் மொத்தம் 44,921 புத்தகங்களும், புத்தக

வங்கியில் **3,355** புத்தகங்களும் உள்ளன. மேலும், **510** இதழ்கள் வரவழைக்கப்படுகிறது இதில், **74** தேசிய இதழ்களும் அடங்கும்.

இதுவரை, இக்கல்லூரி **8,983** பொறியியல் பட்டதாரிகளையும் **923** முதுநிலை கணினி பயன்பாடு பட்டதாரிகளையும் **191** முதுகலை கட்டடவியல் பட்டதாரிகளையும் **18** முதுகலை வெப்பவியல் பட்டதாரிகளையும் **27** முதுகலை கணினி அறிவியல் பட்டதாரிகளையும் உருவாக்கியுள்ளது.

### 14.2 பெருந்துறை மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை, பெருந்துறை

இந்நிறுவனத்தின் கீழ் இயங்கிவரும் பெருந்துறை மருத்துவக் கல்லூரி 1986-இல் தொடங்கப்பட்டு 1992-93-ஆம் கல்வியாண்டிலிருந்து ஈரோடு மாவட்டம், பெருந்துறையில் செயல்பட்டு வருகின்றது. இக்கல்லூரியில் ஆண்டொன்றிற்கு, **100** மாணவர்கள் மருத்துவ பட்டப்படிப்பில் சேர்ந்து பயின்று வருகிறார்கள். இக்கல்லூரியில் தற்சமயம் **281** மாணவ, மாணவியர்கள் கல்வி பயின்று வருகின்றார்கள். மேலும், **60** மாணவர்கள் கட்டாயச் சுழற்சி உள்ளிருப்பு

மருத்துவ பணிக்கான (Compulsory Rotatory Residential Internship) பயிற்சி பெற்று வருகின்றனர்.

மாணவ, மாணவியர்கள் தங்கும் வசதிக்காக தனித்தனி விடுதி வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவ்விடுதிகளில் மொத்தம் 341 மாணவர்கள் தங்கி கல்வி பயின்று வருகின்றனர். நூலகத்தில் மொத்தம் 10,048 புத்தகங்களும் மற்றும் 101 இதழ்களும் உள்ளன.

பெருந்துறை மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில் சராசரியாக தினம் 769 வெளிநோயாளிகள் (Out-patients) மற்றும் இராமலிங்கம் காசநோயாளர் நல மருத்துவ நிலையத்தில் 41 வெளிநோயாளிகள் (Out patients) மருத்துவம் பெற்று வருகின்றனர். பெருந்துறை மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில், 350 படுக்கை வசதியும் இராமலிங்கம் காசநோயாளர் நல மருத்துவ நிலையத்தில் 120 படுக்கை வசதியும் உள்ளது. பெருந்துறை மருத்துவக் கல்லூரியில் இவ்வாண்டில் நாளொன்றுக்கு சராசரியாக 350.6 படுக்கைகள் உள்நோயாளிகளால் உபயோகப்படுத்தப்பட்டது. இராமலிங்கம் காசநோயாளர் நல மருத்துவ நிலையத்தில் இவ்வாண்டில்

நாளொன்றுக்கு சராசரியாக **34.8** படுக்கைகள் உள்நோயாளிகளினால் (In-patient) உபயோகப்படுத்தப்பட்டது. பெருந்துறை மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையின் படுக்கை உபயோகத்தின் சராசரி விகிதம் **100.17** % ஆகும். இராமலிங்கம் காசநோயாளர் நல மருத்துவ நிலையத்தில் படுக்கை உபயோகத்தின் சராசரி விகிதம் **29** % ஆகும்.

பெருந்துறை மருத்துவக் கல்லூரியில் **137** மருத்துவர்களும், **117** மருத்துவம் சார்ந்த பணியாளர்களும், **108** இதர பணியாளர்களும் ஆக மொத்தம் **362** பணியாளர்கள் பணி செய்து வருகிறார்கள்.

இதுவரை **1,548** மருத்துவர்களை பெருந்துறை மருத்துவக் கல்லூரி உருவாக்கியுள்ளது.

## 14.3 சாலை போக்குவரத்து நிறுவனத்தின் செவிலியர் பயிற்சிப் பள்ளி, பெருந்துறை

இம்மருத்துவக் கல்லூரி வளாகத்தில் செவிலியர் பட்டயப் படிப்பு **2008–09** ஆண்டு முதல் நடத்தப்பட்டு வருகிறது. ஆண்டுதோறும் அனைத்து **20** மாணவியர்கள் இடங்களும் தொழிலாளர்களின் நிர்வாக ஒதுக்கீட்டின்

கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டு அனுமதிக்கப்படுகிறார்கள். இவ்வாண்டில் 48 மாணவிகள் செவிலியர் பட்டயப்படிப்பும், 17 மாணவிகள் செவிலியர் பயிற்சியும் பெறுகின்றனர்.

## 14.4 சாலை போக்குவரத்து நிறுவனத்தின் பல்தொழில் நுட்பப் பயிலகங்கள்

சாலை போக்குவரத்து நிறுவனத்தின் கீழ் மூன்று பல்தொழில் நுட்பப் பயிலகங்கள், குரோம்பேட்டை (சென்னை), பர்கூர் (கிருஷ்ணகிரி) மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் 1992–93 ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகின்றன. 2013–14 ஆண்டில் புதியதாக தொடங்கிய இயந்திரவியல் தொழில்நுட்ப பிரிவு 60 பேர் அனுமதிக்கும் வகையில் மூன்று பல்தொழில்நுட்பப் பயிலகங்களுக்கும் அனுமதி பெறப்பட்டுள்ளது. பல்தொழில்நுட்பப் பயிலகங்களில், தற்போது பயிற்றுவிக்கும் பட்டய படிப்புகள், ஆண்டு தோறும் பட்டய படிப்பிற்கு சேர்த்துக் கொள்ளப்படும் மாணவ, மாணவியர்களின் எண்ணிக்கை விவரங்கள் பின்வருமாறு:–

| வ. எண் | விவரம் | தொடங்–கப்பட்ட ஆண்டு | ஆண்டிற்கு அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை | தற்போது முதலாண்டில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை | முதலாண்டு முதல் இறுதி ஆண்டு முடிய மொத்த மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| சா.போ.நி பல்தொழில்நுட்பப் பயிலகம், குரோம்பேட்டை, சென்னை | | | | | |
| 1. | மின்சாரம் மற்றும் மின்னணுவியல் | 1992 | 60 | 50 | 178 |
| 2. | மின்னணுவியல் & தொலை தொடர்பியல் | 1992 | 60 | 40 | 140 |
| 3. | கணினி தொழில்நுட்பம் | 1992 | 60 | 32 | 100 |
| 4. | இயந்திரவியல் | 2013 | 60 | 51 | 191 |
| மொத்தம் (அ) | | | 240 | 173 | 609 |
| சா.போ.நி பல்தொழில்நுட்பப் பயிலகம், பர்கூர், கிருஷ்ணகிரி | | | | | |
| 1. | மின்சாரம் மற்றும் மின்னணுவியல் | 1992 | 60 | 41 | 163 |
| 2. | மின்னணுவியல் & தொலை தொடர்பியல் | 1992 | 60 | 28 | 123 |
| 3. | கணினி தொழில்நுட்பம் | 1992 | 60 | 34 | 130 |
| 4. | இயந்திரவியல் | 2013 | 60 | 58 | 197 |
| மொத்தம் (ஆ) | | | 240 | 161 | 613 |
| சா.போ.நி பல்தொழில்நுட்பப் பயிலகம், திருநெல்வேலி | | | | | |
| 1. | மின்சாரம் மற்றும் மின்னணுவியல் | 1992 | 60 | 42 | 173 |
| 2. | மின்னணுவியல் & தொலை தொடர்பியல் | 1992 | 60 | 29 | 133 |
| 3. | கணினி தொழில்நுட்பம் | 1992 | 40 | 14 | 82 |
| 4. | இயந்திரவியல் | 2013 | 60 | 51 | 191 |
| மொத்தம் (இ) | | | 220 | 136 | 579 |
| மொத்தம் (அ)+(ஆ)+(இ) | | | 700 | 470 | 1,801 |

இம்மூன்று பல்தொழில்நுட்பப் பயிலகங்களில் **2017–18–**ஆம் ஆண்டு வரை **8,758** மாணவர்கள் பட்டயம் பெற்றுள்ளனர். (குரோம்பேட்டை **3,087,** பர்கூர் **2,919** மற்றும் திருநெல்வேலி **2,752).**

சாலை போக்குவரத்து நிறுவனம் மற்றும் அதன் கிளை நிறுவனங்களில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் கல்வி பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை விவரம் பின்வருமாறு:–

| வ. எண் | விவரம் | அலுவலர்களின் எண்ணிக்கை | மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | சாலை போக்குவரத்து நிறுவனம், சென்னை. | 34 | – |
| 2. | ஓட்டுநர் பயிற்சி பிரிவு, கும்மிடிப்பூண்டி | 22 | – |
| 3. | ஓட்டுநர் பயிற்சி பிரிவு, திருச்சி. | 2 | – |
| 4. | சாலை மற்றும் போக்குவரத்து பொறியியல் கல்லூரி, சித்தோடு. | 158 | 1,754 |
| 5. | பெருந்துறை மருத்துவக் கல்லூரி, பெருந்துறை. | 362 | 400 |
| 6. | சாபோநி செவிலியர் பள்ளி பெருந்துறை. | 6 | 65 |
| 7. | சாலை போக்குவரத்து நிறுவன பல்தொழில்நுட்பப் பயிலகம், குரோம்பேட்டை. | 31 | 609 |
| 8. | சாலை போக்குவரத்து நிறுவன பல்தொழில்நுட்பப் பயிலகம், பர்கூர். | 29 | 613 |
| 9. | சாலை போக்குவரத்து நிறுவன பல்தொழில்நுட்பப் பயிலகம், திருநெல்வேலி. | 35 | 579 |
| **மொத்தம்** | | **679** | **4,020** |

## அத்தியாயம்–15

## மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை

தமிழ்நாடு முழுவதும் உள்ள அரசுத்துறை வாகனங்களின் பழுதுநீக்கம் மற்றும் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக பல்வேறு மாவட்டத் தலைநகரங்களில் 20 அரசு தானியங்கி பணிமனைகளையும், அவைகளின் செயல்பாடுகளை முறையாக கண்காணித்து, நடைமுறைப்படுத்த மூன்று மண்டல துணை இயக்குநரகங்களையும் உள்ளடக்கி, இயக்குநரை துறைத் தலைவராகக் கொண்டு, மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை இயங்கி வருகிறது.

பொதுமேலாளர் அலுவலகம், அரசு மத்திய தானியங்கிப் பணிமனை, சென்னை பொதுமேலாளர் அவர்களின் மேற்பார்வையின் கீழ் இயங்கி வருகிறது. மத்திய தானியங்கிப் பணிமனையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர், அமைச்சர் பெருமக்கள் மற்றும் மிக முக்கிய பிரமுகர்களின் பாதுகாப்பு வாகனங்கள், துறைச் செயலாளர்கள் வாகனங்கள் மற்றும் இதர துறை வாகனங்கள் உடனுக்குடன் பழுதுநீக்கம் செய்யப்படுகின்றன. அரசின் கொள்கையின்படி

அரசுத்துறைகளுக்கு எரிபொருள் சிக்கனம், பாதுகாப்பு மற்றும் வசதிகளை கருத்தில் கொண்டு உயர்தொழில்நுட்ப வாகனங்களை கொள்முதல் செய்கிறது.

**பணிமனை மற்றும் பராமரிப்பு**

திருச்சி, மதுரை மற்றும் சேலத்தில் மண்டல துணை இயக்குநரின் கட்டுப்பாட்டில் மூன்று அரசு தானியங்கி பணிமனைகள் இயங்கி வருகின்றன. மற்ற சார்நிலை அலுவலகங்களான கோவை, வேலூர், தருமபுரி, நாகர்கோவில், தூத்துக்குடி, விழுப்புரம், கடலூர், ஈரோடு, தஞ்சாவூர், உதகமண்டலம், இராமநாதபுரம், காஞ்சிபுரம், திருநெல்வேலி, விருதுநகர், சிவகங்கை மற்றும் திண்டுக்கல் ஆகிய இடங்களில் உள்ள தானியங்கி பணிமனைகள் தானியங்கி பொறியாளர்களின் கட்டுபாட்டின் கீழ் இயங்கி வருகின்றது.

சுமார் 22,269–க்கும் மேற்பட்ட அரசுத்துறை வாகனங்களை பராமரித்து வரும் இத்துறையின் கட்டுப்பாட்டில், முக்கிய பிரமுகர்கள் மற்றும் அரசுச் செயலர்களின் வாகனங்களுக்கான சிறுசிறு பழுதுகளை நீக்க சுத்திகரிப்புப் பணிகளை கவனிப்பதற்காக, தலைமைச் செயலக பணிமனை ஒன்று செயல்பட்டு வருகிறது. அரசுத்துறை ஊர்திகளுக்கு எரிபொருள் வழங்குவதற்காக இத்துறையின் பல்வேறு

பணிமனைகளில் மொத்தம் **10** எரிபொருள் கிடங்குகளும் இயக்கப்பட்டு வருகின்றன.

இம்மாநிலத்திலுள்ள அரசுத் துறை ஊர்திகளுக்கான தரமான பராமரிப்பு பணிகளை சிக்கனமான செலவில் திறம்பட அளிப்பதே இத்துறையின் முக்கிய நோக்கமாகும்.

**2017–2018**–ம் ஆண்டில் நவீனரக ஊர்திகளை பழுது நீக்கம் செய்வதற்காக **25** தொழில்நுட்ப பணியாளர்களுக்கு கீழ்க்கண்டவாறு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது:-

| வ. எண் | பயிற்சி வழங்கிய நிறுவனத்தின் விவரம் | பயிற்சியின் தன்மை | பயிற்சி பெற்ற நபர்களின் எண்ணிக்கை | பயிற்சி கட்டணம் |
|---|---|---|---|---|
| 1. | டாடா மோட்டார்ஸ், சென்னை | டாடா சபாரி (புல்லட் புரூப்) உடன் 2.2 லிட்டர் இன்ஜின் | 18 நபர்கள் | இலவச பயிற்சி |
| 2. | டி.வி.எஸ். லுகாஸ்,இன்டியன் சர்விஸ் லிட், சென்னை | டி.வி.எஸ்.புயூயல் இன்ஜக்சன் எக்யூப்மென்ட்ஸ் | 7 நபர்கள் | 10,500/- |

**2017–2018**–ம் ஆண்டில் இத்துறையின் மூலம் பழுதுநீக்கம் செய்யப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை **29,604** ஆகும்.

**2017–2018–**ம் ஆண்டில் பயனற்றதென கழிவு செய்யப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை விவரம் பின்வருமாறு:-

| ஆண்டு | கனரக மோட்டார் வாகனங்கள் | கார் | ஈப்பு | வேன் | மோட்டார் சைக்கிள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 2017-18 | 61 | 121 | 314 | 47 | 389 | 932 |

**நிதிச் செயல்பாடு**

**2017–2018–**ஆம் ஆண்டிற்கான நிதிச்செயல்பாட்டின் விவரம் பின்வருமாறு:-

(ரூபாய் இலட்சங்களில்)

| **கணக்குத் தலைப்பு வகைப்பாடு** | **2017 – 2018–ஆம் ஆண்டிற்கான வரவு செலவு மதிப்பீடு** | |
|---|---|---|
| திட்டம் சாரா செலவினம் | ஒதுக்கீடு | செலவினம் |
| (அ) வருவாய் | 5572.26 | **5331.63** |
| (ஆ) மூலதனம் | **66.50** | **66.49** |

**அம்மா ஓட்டுநர் பயிற்சி நிறுவனங்கள்**

மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறையின் கீழ் இயங்கும் திருச்சி, சேலம் மற்றும் மதுரை ஆகிய அரசு தானியங்கிப் பணிமனைகளில் அரசுத்துறை ஓட்டுநர்களின் பணித்திறமையை மேம்படுத்தவும் மற்றும் அனைத்து அரசுத் துறைகளில் பணிபுரியும் அனைத்து ஓட்டுநர்களுக்கும் புத்துணர்ச்சி பயிற்சி, அவ்வப்போது அளிக்கும் பொருட்டு "அம்மா ஓட்டுநர் பயிற்சி நிறுவனம்" தொடங்குவதற்கு கீழ்க்கண்ட பணியிடங்களை உருவாக்குவதற்கு அரசு ஆணையிட்டுள்ளது :-

| வ. எண். | துவங்கப்பட உள்ள பணியிடங்கள் | ஒவ்வொரு மண்டல துணை இயக்குநரகத்திற்கும் | மூன்று மண்டல துணை இயக்குநரகத்திற்கும் |
|---|---|---|---|
| 1. | தானியங்கிப் பொறியாளர் | 1 | 3 |
| 2. | பயிற்சி அளிப்பவர் | 2 | 6 |
| 3. | அலுவலக உதவியாளர் | 1 | 3 |
| மொத்தம் | | 4 | 12 |

அம்மா ஓட்டுநர் பயிற்சி நிறுவனங்களை மூன்று மண்டலத்தில் தொடங்கிட கீழ்க்கண்ட செலவினங்களுக்காக அரசு நிதியினை ஒதுக்கியுள்ளது:-

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண். | விவரம் | மண்டலம் ஒன்றுக்கு | மூன்று மண்டலங்களுக்கு |
|---|---|---|---|
| 1. | அம்மா ஓட்டுநர் பயிற்சி நிறுவன கட்டடப் பணி நிலை –I மற்றும் II | 55.50 | 166.50 |
| 2. | கணினி மற்றும் இதர உபகரணங்கள் கொள்முதல் | 5.00 | 15.00 |
| 3. | மரத்தளவாடங்கள் கொள்முதல் | 5.00 | 15.00 |
| 4. | ஓட்டுநர்களுக்கான பயிற்சி | – | 15.60 |
| 5. | பணியாளர்களுக்கான ஊதியம் | – | 37.26 |
| | மொத்தம் | 65.50 | 249.36 |

அரசின் ஆணையின்படி, “அம்மா ஓட்டுநர் பயிற்சி நிறுவனம்’’ சேலம், திருச்சி மற்றும் மதுரை ஆகிய மூன்று மண்டல துணை இயக்குநரகங்களிலும் தொடங்கிட அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## அத்தியாயம்–16

## துறைகளுக்கு இடையேயான ஒருங்கிணைப்பு

போக்குவரத்துத் துறையானது, தென்னக இரயில்வே துறை, சிவில் விமானப் போக்குவரத்துத்துறை, தபால் துறை மற்றும் தொலைத் தொடர்புத்துறை ஆகிய மத்திய அரசுத்துறைகளின் போக்குவரத்து தொடர்பான மேம்பாட்டுத் திட்டங்களை தமிழகத்தில் செயல்படுத்தும் ஒருங்கிணைப்புத் துறையாக விளங்குகிறது.

- மேற்கண்ட துறைகளிடமிருந்து பெறப்படுகின்ற நிலத்தேவை தொடர்பான கருத்துருக்கள் மீது மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் நில நிர்வாக ஆணையர் மற்றும் இதர தொடர்பு துறைகளுக்கு பரிந்துரைக்காக அனுப்பப்படும்.

- கையகப்படுத்தப்பட்ட நிலங்கள் உரிய துறைகளிடம் அவைகளின் திட்டங்களைத் தொடங்குவதற்காக ஒப்படைக்கப்படுகின்றன.

## 16.1. தமிழகத்திலுள்ள விமான நிலையங்களை நவீனமயமாக்குதல் மற்றும் விரிவாக்கம் செய்தல்

இந்திய விமான நிலைய ஆணையம், விரிவாக்குதல் மற்றும் நவீனமயமாக்குதல் திட்டத்தின்கீழ் சென்னை விமான நிலையம் மற்றும் பெருநகர் அல்லாத விமான நிலையங்களான (Non-MetroAirports) மதுரை, திருச்சி, கோயம்புத்தூர், தூத்துக்குடி மற்றும் சேலம் ஆகிய விமான நிலையங்களை மேம்படுத்த திட்டங்கள் மேற்கொண்டுள்ளது.

இத்திட்டங்களுக்கான தேவைப்படும் நிலங்களை விமான நிலையங்கள் ஆணையத்திடமிருந்து பெறப்படும் கோரிக்கைகளின் அடிப்படையில் எந்தவித வில்லங்கமும் இன்றி இலவசமாக வழங்குவதற்கு போக்குவரத்துத் துறை நடவடிக்கை எடுத்து வருகின்றது. நில எடுப்பு விவரங்கள் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது: -

| வ. எண் | திட்டத்தின் பெயர் | நில எடுப்பு விவரம் |
|---|---|---|
| 1 | சென்னை விமான நிலைய விரிவாக்கத் திட்டம் | சென்னை விமான நிலைய விரிவாக்கத் திட்டத்திற்காக, 129.82 ஏக்கர் நிலங்கள் இந்திய விமான நிலையங்கள் ஆணையத்திடம் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.<br>மேலும், 101 ஏக்கர் நிலங்களை கையகப்படுத்தி இந்திய விமான நிலையங்கள் ஆணையத்திடம் ஒப்படைப்பு செய்யும் பணிகள் விரைவாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |

| வ. எண் | திட்டத்தின் பெயர் | நில எடுப்பு விவரம் |
|---|---|---|
| 2 | மதுரை விமான நிலைய விரிவாக்கத் திட்டம் | மதுரை விமான நிலைய விரிவாக்கத் திட்டத்திற்காக 615.92 ஏக்கர் நிலங்களை கையகம் / நில உரிமை மாற்றம் செய்வதற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.<br><br>466.43 ஏக்கர் பட்டா நிலங்களை கையகம் செய்யும் பணி முடிவுற்றுள்ளது. மீதமுள்ள 149.49 ஏக்கர் அரசு புறம்போக்கு நிலங்களாகும்.<br><br>புதிய நில எடுப்பு சட்டம் 2013–ன்படி 463.12 ஏக்கர் பட்டா நிலங்களுக்கு விலைமதிப்பு நிர்ணயம் செய்யும் பணி நடைபெற்று வருகிறது.<br><br>நிலங்களை கையகப்படுத்தும் பொருட்டு ரூ.166.69 கோடி இடைக்கால இழப்பீட்டு தொகையாக நில உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.<br><br>மேலும், மதுரை விமான நிலைய விரிவாக்கத் திட்டத்திற்காக மாற்று சுற்றுச் சாலை அமைக்கும் பொருட்டு 160.39 ஏக்கர் நிலங்களை கையகம் / நில உரிமை மாற்றம் செய்வதற்கு அரசால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. |
| 3. | கோயம்புத்தூர் விமான நிலைய ஓடுபாதை விரிவாக்கத் திட்டம் | கோவை விமான நிலைய ஓடுபாதை விரிவாக்கத் திட்டத்திற்காக 490.27 ஏக்கர் நிலங்களை கையகம் / நில உரிமை மாற்றம் செய்வதற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.<br><br>461.90 ஏக்கர் பட்டா நிலங்களை கையகம் செய்யும் பணி முடிவுற்றுள்ளது. மீதமுள்ள |

| வ. எண் | திட்டத்தின் பெயர் | நில எடுப்பு விவரம் |
|---|---|---|
| | | 28.37 ஏக்கர் அரசு புறம்போக்கு நிலங்களாகும். தற்போது, 380.07 ஏக்கர் பட்டா நிலங்களுக்கு தமிழ்நாடு தொழில் நோக்கங்களுக்கான நில எடுப்புச் சட்டம் 1997–இன்கீழ் விலைமதிப்பு நிர்ணயம் செய்யும் பணி நடைபெற்று வருகின்றது.<br><br>நிலங்களை கையகப்படுத்தும் பொருட்டு, தற்போது வரை ரூ.176.28 கோடி இடைக்கால இழப்பீட்டு தொகையாக நில உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. |
| 4 | திருச்சி விமான நிலைய விரிவாக்கத் திட்டம் | திருச்சி விமான நிலைய விரிவாக்கத் திட்டத்திற்காக 345.63 ஏக்கர் நிலங்களை கையகம் / நில உரிமை மாற்றம் செய்வதற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.<br><br>தற்போது, நிலஎடுப்பு பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன. |
| 5 | சேலம் விமான நிலைய விரிவாக்கத் திட்டம் | சேலம் விமான நிலைய விரிவாக்கத் திட்டத்திற்காக 567.42 ஏக்கர் நிலங்களை கையகம் / நில உரிமை மாற்றம் செய்வதற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.<br><br>தற்போது, நிலஎடுப்பு பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன. |
| 6 | தூத்துக்குடி விமான நிலைய விரிவாக்கத் திட்டம் | தூத்துக்குடி விமான நிலைய விரிவாக்கத் திட்டத்திற்காக 586 ஏக்கர் நிலங்களை கையகம் / நில உரிமை மாற்றம் செய்வதற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தற்போது, 19.77 ஏக்கர் நிலங்கள் இத்திட்டத்திற்காக கூடுதலாக தேவைப்படுகிறது. |

| வ. எண் | திட்டத்தின் பெயர் | நில எடுப்பு விவரம் |
|---|---|---|
| | | 600.93 ஏக்கர் பட்டா நிலங்களை கையகம் செய்யும் பணி முடிவுற்றுள்ளது. மீதமுள்ள 4.66 ஏக்கர் அரசு புறம்போக்கு நிலங்களாகும்.<br><br>தற்போது வரை, ரூ. 12.61 கோடி நில உரிமையாளர்களுக்கு இழப்பீட்டுத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.<br><br>மேலும், 410.85 ஏக்கர் நிலங்கள் இந்திய விமான நிலையங்கள் ஆணையத்திடம் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. |

**மண்டலங்களுக்குள் விமானப் போக்குவரத்து இணைப்புத் திட்டம்**

அரசு, 2016–ஆம் ஆண்டு தேசிய விமானப் போக்குவரத்து கொள்கையின் கீழ் செயல்பாட்டில் உள்ள விமான ஓடுதளங்கள் (Air-Strips) மற்றும் விமான நிலையங்களை புதுப்பிப்பதன் வாயிலாக, மாநிலத்தில் உள்ள பயன்பாட்டில் இல்லாத மற்றும் குறைந்த பயன்பாட்டில் உள்ள விமான நிலையங்களுக்கு, விமானப் போக்குவரத்து இணைப்பிற்கு வகைப்படுத்துவதற்காக விமானப் போக்குவரத்து அமைச்சகத்துடன் **08.06.2017** அன்று மண்டலங்களுக்குள் விமான போக்குவரத்து இணைப்புத் திட்டமான (RCS)–“உடான்” செயல்படுத்துவதற்காக புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளது.

மேற்கண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில், இத்திட்டத்தின்கீழ் இயங்கும் விமான நிலையங்கள் மற்றும் விமானங்களுக்கான விமான எரிபொருளுக்கு (Air Turbine Fuel) ஒரு சதவீத மதிப்பு கூட்டு வரியினை குறைத்துள்ளது மற்றும் இத்திட்டத்தின்கீழ் விமான நிலையங்களுக்கு பாதுகாப்பு மற்றும் தீயணைப்பு சேவைகளை இலவசமாக வழங்கி வருகிறது. மேலும், சாத்தியகூறு இடைவெளி நிதியில் (Viability Gap Fund) 20 சதவீதத்தை தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியத்தின் உதவியுடன் தமிழக அரசின் பங்காகவும், மீதமுள்ள 80 சதவீதத்தை நடுவண் அரசின் பங்காகவும் விமான சேவை நிறுவனங்களுக்கு வழங்கப்படும். உடான் திட்டத்தின்கீழ் செயல்பாட்டிற்கு வரும் ஒவ்வொரு விமான நிலையத்திற்கும் 50% இருக்கைகளேனும் ரூ.2,500/–க்கு விற்பனை செய்யப்படுவதை உறுதிசெய்வதற்கு நிபந்தனையுடன் கூடிய உதவித்தொகை வழங்கப்படும். இது தொடக்க ஆண்டுகளில் விமான நிலையத்தை மேம்படுத்த உதவும்.

மாநிலத்தில் மண்டலங்களுக்குள் விமானப் போக்குவரத்து இணைப்புத் திட்டத்தை – (உடான்) செயல்படுத்துவதற்காக தமிழ்நாட்டில் 13 விமான நிலையங்கள் கண்டறியப்பட்டுள்ளன. மொத்தம் உள்ள 13 விமான நிலையங்களுள், முதற்கட்டமாக

நெய்வேலி மற்றும் சேலம் விமான நிலையங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன. அதனடிப்படையில், 25.03.2018 அன்று முதல் சேலத்திலிருந்து சென்னைக்கு விமான சேவை தொடங்கப்பட்டுள்ளது. அதேபோல், தஞ்சாவூர் மற்றும் வேலூர் விமான நிலையங்கள் இரண்டாம் கட்டமாக தேர்வு செய்யப்பட்டுள்ளன. விமான சேவை நிறுவனங்களுடன் ஏல நடவடிக்கை இறுதி நிலையில் உள்ளதால் விமான சேவை விரைவில் தொடங்கப்படும். ஏனைய எட்டு விமான நிலையங்களுக்கு போக்குவரத்து சேவைக்கான முதலீட்டினை வழங்குவதற்காக நிறுவனங்களை ஊக்கப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 16.3 தமிழகத்தில் செயல்படுத்தப்படும் இரயில்வே திட்டங்கள்

தமிழ்நாட்டில் இரயில் சேவைகள் அனைத்தும் தென்னக இரயில்வேயால் பராமரிக்கப்படுகிறது. மாநிலத்தில் சென்னை, திருச்சி, மதுரை, சேலம் ஆகிய கோட்டங்கள் முழுவதும் மற்றும் பாலக்காடு இரயில்வே கோட்டத்தின் சில பகுதிகளும் அடங்கும். இம்மாநிலம் 3,450 கி.மீ அகல இரயில்பாதைகளை கொண்டுள்ளது.

இரட்டை இரயில் பாதை சரக்கு மற்றும் அதிவிரைவு இரயில் தடங்களுக்கான நில எடுப்பு பணிகளை

மேற்கொள்வதற்கு தென்னக இரயில்வே துறைக்கு ஒருங்கிணைப்புத் துறையாக போக்குவரத்துத் துறை விளங்குகின்றது. தற்போது புதிய வழித்தடங்கள் மற்றும் பல இரட்டை இரயில் பாதை திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அதன் நில எடுப்பு விவரங்கள் பின்வருமாறு:-

| வ. எண் | இரயில்வே திட்டங்கள் | நிலஎடுப்பு விவரங்கள் |
|---|---|---|
| 1 | மீளவிட்டான் – மேலமருதூர் (மதுரை –தூத்துக்குடி (வழி அருப்புக்கோட்டை) புதிய அகல இரயில்பாதை திட்டம்) | • இப்புதிய இரயில் பாதை இப்பகுதியிலுள்ள துறைமுகங்கள் மற்றும் செயல்படுத்தப்படவுள்ள புதிய மின்உற்பத்தி நிலையங்களுக்கு முக்கிய இணைப்புத்தடமாக இருக்கும்.<br>• தூத்துக்குடி மாவட்டத்தில் **9.61.75** ஹெக்டேர் நிலங்கள் நில எடுப்பு செய்யும் பணிகள் முடிவுற்று இரயில்வே துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.<br>• மீதமுள்ள **65.25.09** ஹெக்டேர் நிலங்கள் விரைவில் இரயில்வே துறையிடம் ஒப்படைக்கப்படவுள்ளது. |
| 2 | விழுப்புரம் – திண்டுக்கல் இரட்டை அகல இரயில் பாதை திட்டம் | • இத்திட்டம் தமிழகத்தின் வடக்கு மற்றும் தெற்கு பகுதிகளை இணைக்கும் மதிப்புமிக்க திட்டமாகும். இத்திட்டம் அதிக பயணிகளின் போக்குவரத்துத் தேவையை நிறைவு செய்வதால் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். |

| வ. எண் | இரயில்வே திட்டங்கள் | நிலஎடுப்பு விவரங்கள் |
|---|---|---|
| | | • இத்திட்டத்திற்காக அரியலூார், பெரம்பலூர், விழுப்புரம், திண்டுக்கல், கடலூர் மற்றும் திருச்சி ஆகிய மாவட்டங்களிலுள்ள நிலங்களை நிலஎடுப்பு செய்ய அரசால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, நிலஎடுப்பு பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. |
| 3 | ஓமலூர் – மேட்டூர் அணை இரட்டை அகல இரயில் பாதை திட்டம். | • இத்திட்டத்திற்காக சேலம் மாவட்டத்திலுள்ள 15 கிராமங்களில் 29.20.0 ஹெக்டேர் நிலங்களை நில எடுப்பு செய்ய அரசால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, நில எடுப்பு பணிகள் முடிவுற்று நிலமதிப்பு நிர்ணயம் செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 4 | சின்ன சேலம் – கள்ளக்குறிச்சி அகல இரயில் பாதை திட்டம். | • இத்திட்டத்திற்காக விழுப்புரம் மாவட்டத்திலுள்ள 11 கிராமங்களில் 48.04.00 ஹெக்டேர் நிலங்களை நில எடுப்பு செய்ய அரசால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, நில எடுப்பு பணிகள் முடிவுற்று நிலமதிப்பு நிர்ணயம் செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 5 | திண்டிவனம் – நகரி புதிய அகல இரயில் பாதை திட்டம். | • இத்திட்டம் வேளாண் உற்பத்திக்கான முக்கிய வர்த்தக மையமாகச் செயல்படும் திண்டிவனம் மற்றும் நகரி பகுதிகளுக்கிடையே இணைப்பினை சீராக்குகிறது. இத்திட்டம் மாண்புமிகு இந்திய பிரதமர் |

| வ. எண் | இரயில்வே திட்டங்கள் | நிலஎடுப்பு விவரங்கள் |
|---|---|---|
| | | அவர்களின் பிரகதி திட்டத்தின் மூலம் ஆய்வு செய்யப்படுகின்றது.<br><br>• இத்திட்டத்திற்காக, திருவள்ளூர், திருவண்ணாமலை, விழுப்புரம் மற்றும் வேலூர் ஆகிய 4 மாவட்டங்களில் 682.71.41 ஹெக்டேர் நிலங்களை நிலஎடுப்பு செய்ய அரசால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு நிலஎடுப்பு பணிகள் அதிவிரைவாக நடைபெற்று வருகின்றன. |
| 6 | திண்டிவனம் – திருவண்ணாமலை புதிய அகல இரயில் பாதை திட்டம். | • இத்திட்டத்தில் விழுப்புரம் மற்றும் திருவண்ணாமலை ஆகிய 2 மாவட்டங்கள் கவரப்படுகின்றன. திருவண்ணாமலை மாவட்டத்தில் 31.36.04 ஹெக்டேர் நிலங்கள் நிலஎடுப்பு செய்யப்பட்டு இரயில்வே துறைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 43.26.5 ஹெக்டேர் நிலங்களை நிலஎடுப்பு செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன.<br><br>• விழுப்புரம் மாவட்டத்தில் 183.44.5 ஹெக்டேர் நிலங்களை நிலஎடுப்பு செய்ய அரசால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு நிலஎடுப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 7 | சென்னை கடற்கரை – கொருக்குபேட்டை மற்றும் கொருக்குபேட்டை – | • தமிழ்நாட்டில் சென்னை மற்றும் திருவள்ளூர் மாவட்டங்கள் வழியாக இந்த இரயில் பாதை செல்கிறது. இந்த இரயில் பாதை சென்னை |

| வ. எண் | இரயில்வே திட்டங்கள் | நிலஎடுப்பு விவரங்கள் |
|---|---|---|
| | எண்ணூர் இடையே 3வது மற்றும் 4வது இரயில் பாதை அமைக்கும் திட்டம் | கடற்கரை – கும்மிடிப்பூண்டி பிரிவில் புறநகர் போக்குவரத்தை அதிகரிக்க உதவுகிறது.<br>• சென்னை மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் உள்ள மூன்று கிராமங்களில் 15890.5 சதுர மீட்டர் நிலங்களை நிலஎடுப்பு செய்ய நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு நிலஎடுப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன. |

மதுரை – தூத்துக்குடி மற்றும் மணியாச்சி – நாகர்கோவில் இருவழி அகல இரயில்பாதை அமைக்கும் திட்டங்களுக்கு நிர்வாக அனுமதி வழங்குவதற்கான முன்மொழிவுகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

## III முடிவுரை:

தமிழக அரசின் போக்குவரத்துத் துறையானது பொது போக்குவரத்து வகைகளான இரயில்வே, விமானம் மற்றும் பேருந்து போக்குவரத்தினை உயர்த்திட உறுதிபூண்டுள்ளதை மீண்டும் வலியுறுத்தப்படுகிறது. இரயில்வே மற்றும் விமானப் போக்குவரத்து துறைகள் மாநிலத்தின் நன்மைக்காக தமது

திட்டங்களை விரைவாக முடித்திட நிலங்களை விரைவாக கையகப்படுத்திட போக்குவரத்துத்துறை உதவுகின்றது. அரசு போக்குவரத்துக் கழகங்களை பொறுத்த வரையில் பேருந்துகளின் எண்ணிக்கைகளை உயர்த்த, புதிய பேருந்துகள் கொள்முதல் செய்ய அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேலும், சுற்றுச் சூழலுக்கு உகந்த மற்றும் மரபு எரிபொருள் செலவினை கட்டுப்படுத்திட புதிய தலைமுறை பேருந்துகளை வாங்கிடவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அரசு போக்குவரத்துக் கழகங்களின் செயல்திறன்களை உயர்த்துவது தற்போது தவிர்க்க முடியாத ஒன்றாகும், அதுவே வளர்ச்சிக்கு வழிவகுக்கும். மேலும், இவ்வகையான வளர்ச்சியினை மெய்யாக்கிட உகந்த தொழில்நுட்பம் தற்போது போக்குவரத்துத் துறையில் புகுத்தப்பட்டுள்ளது.

தமிழகம் பொது போக்குவரத்துத்துறையினை பல புது முயற்சிகள் மூலம் வளர்த்திட முடிவெடுத்துள்ளது. வரும் ஆண்டுகளில் புதிய திட்டங்கள் மற்றும் முன்மொழிவுகள் மூலம் தமிழ்நாட்டு மக்களுக்கு சிறந்த பலன்களை தரும். சிறந்த பேருந்து சேவை, பொது மக்களுக்கு வழங்கப்படும் சேவைகளை ஒருங்கிணைத்தல் மற்றும் கிடைக்கும் தரவுகளைக் கொண்டு போக்குவரத்தினை சிறப்பாக்குவது

முக்கிய குறிக்கோளாகும். இதுபோன்ற உயர்ந்த முயற்சிகளால் அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் சீரடையும். மேலும், பொது போக்குவரத்துத்துறையில் தமிழ்நாடு ஒரு உதாரண மாநிலமாக விளங்கும். தடையற்ற சிறந்த விமானப் போக்குவரத்து, கூடுதல் இரயில் வழித்தடங்கள் இணைத்தல் மற்றும் சேரும் இடத்தை இணைக்கும் உயர்த்தப்பட்ட பேருந்து போக்குவரத்து ஆகியவற்றை அடைய போக்குவரத்துத்துறை முயலும்.

**எம்.ஆர். விஜயபாஸ்கர்**
**போக்குவரத்துத் துறை அமைச்சர்**

# <u>இணைப்பு</u>

## மானியக் கோரிக்கை எண். 48

## போக்குவரத்துத் துறை

## வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு 2018–2019

(ரூபாய் ஆயிரத்தில்)

| வ. எண் | துறை தலைமையகம் | வருவாய் | மூலதனம் | கடன் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1 | தலைமைச் செயலகம் | 840,41,58 | 790,28,87 | 1,025,00,01 | 2,655,70,46 |
| 2 | மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை | 60,63,92 | 1,00,00 | – | 61,63,92 |
| | **மொத்தம்** | **901,05,50** | **791,28,87** | **1,025,00,01** | **2,717,34,38** |